26028

O31m211, N805
J9

தமிழ் வாழ்க!

துணர் ௩௫. மலர் ௧

CONNEMARA PUBLIC LIBRARY
3 APR 1959
MADRAS

தமிழ்ப் பொழில்

விகாரி - சித்திரை

1959

கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

தொண்டு தமிழ் முன்னேற்றம்

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

பொழிற்றொண்டர்:

ச. சுயம்பிரகாசம், B. A., B. L.,

தமிழ்ப் பொழில்.

பதிப்பாசிரியர் குழு.

1. திரு. ச. சுயம்பிரகாசம், B. A., B. L., தலைவர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்; பொழிற்றொண்டர்.
2. திரு. நீ. கந்தசாமி பிள்ளை, பள்ளியகரம், தஞ்சாவூர்.
3. பேராசிரியர் தி. வை. சதாசிவ பண்டாரத்தார்,
ஆராய்ச்சித்துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.
4. சித்தாந்த கலாநிதி ஔவை. சு. துரைசாமி பிள்ளை,
பேராசிரியர், தியாகராயர் கல்லூரி, மதுரை.
5. வித்துவான், க. வெள்ளைவாரணனர்,
ஆராய்ச்சித்துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
6. திரு. சி. வேதாசலம், B. A., B. L.,
அமைச்சர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.
7. திரு. வித்துவான் ச. பாலசுந்தரம்,
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.

உள்ளுறை

துணர் 35 — மலர் க

		பக்கம்
1.	அருணசல நிலையத் திறப்பு விழா	5
2.	திரு, K. காமராசர் பேருரை	8
3.	திரு. அ. கு. வேலன் அவர்களின் நன்றியுரை.	12
4.	க. த. ச. கல்வி நிலையங்களின் விழா நிகழ்ச்சிகள்	13
5.	கரந்தைத் தமிழ்ச் சங்க 47-ஆம் ஆண்டு விழா	14
6.	குரல்வினை — சங்கீதம். ப. சுந்தரேசன், குடந்தை	17
7.	தமிழில் தாவரம் வேங்கை — திரு. கு. சீனிவாசன், M. SC., விரிவுரையாளர், அண்ணாமலைநகர்	21
8.	முத்தொள்ளாயிரம் — திரு. அடிகளாசிரியர்	27



அருணசல நிலயம்

CONNEMARA PUBLIC LIBRARY
30 APR 1959
MADRAS

CONNEMARA PUBLIC LIBRARY
30 APR 1959
MADRAS

திரு. அ. கு. வேலனாரின் தந்தையார்
திரு. சி. அருணாசலனார்.

சீர்பெருகிக் கலைவளரச் செந்தமிழின் வளம்பெருகத் திறமை கண்டு
ஊர்புகழ உறவுயரச் சுற்றமொடு நண்பரெலாம் உவந்து போற்ற
ஆர்வமிகுந்.தறம்புரியும் வேலனைநன் மகனாக அடைந்து யர்ந்த
பேர்பெருகும் அமரர் **அருணாசலனார்** புகழினிது பெருகி வாழி!

...MARA PUBLIC LIBRARY
30 APR 19..
MADRAS

திரு. A. K. வேலன் அவர்கள்.

நன்றுபுரி செந்தமிழைத் தேர்ந்துபல கலையறிவும் நயந்து ணர்ந்து
துன்றுபுகழ் படக்கலையிற் றேய்ந்துகலை பெருக்கியறந் துணையாய் நாளும்
நன்றிமிகத் தந்தையின்பே ரால்அருண சலநிலையம் நாட்டித் தந்து
வென்றியினல் ஒளிர்**குழந்தை வேலன்** இசை பெருகிவளம் மேவி வாழி!

CONNEMARA PUBLIC LIBRARY
30 APR 1959
MADRAS

சென்னைப் பல்கலைக் கழக வித்துவான் தேர்வில்

திருப்பனந்தாள் மடத்துப் பரிசான

ஆயிரம் வெண்பொற் காசுகள் பெற்ற

கரந்தைப் புலவர் கல்லூரி மாணவர்கள்.



வித்துவான் அ. மா. பரிமணம், எம். ஏ.
ஆண்டு 1946



வித்துவான் இரா. கலியபெருமாள்
ஆண்டு 1958.

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு ௨௱௯௰	மலர்
	விகாரி, சித்திரை	
௩௪	1959 ஏப்ரல், மே.	க

அருணாசல நிலையத் திறப்பு விழா.

சென்னை அருணாசலப் படப் பிடிப்பு நிலைய உரிமையாளரும், அருணாசலம் திரைப்பட வெளியீட்டாளருமான, திருவாளர் அ. கு. வேலனவர்கள் பெரும் பொருட் செலவில் 'அருணாசல நிலையம்' என்னும் பள்ளிக் கட்டிடத்தைக் கட்டிக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கு உதவியுள்ளார்கள்.

இக்கட்டிடத்தை சென்னை மாநில முதலமைச்சர் திரு. K. காமராசரவர்கள் திறந்து வைத்தார்கள். கரந்தைத் தமிழ்ச் சங்கம் சார்பில் மாண்புமிக்க முதலமைச்சரவர்கட்கு வரவேற்பு வாழ்த்துரை, கும்மி, காவடிச்சிந்து வகையில் இயற்றப்பெற்றும், பள்ளி மாணவியர்களால் இன்னிசையுடன் பாடியாடி வழங்கப்பெற்றது.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பிலும், சங்கக் கல்வி நிலையங்களின் ஆசிரியர்கள் சார்பிலும், திரு. அ. கு. வேலனவர்கட்கும் வரவேற்பு வாழ்த்திதழ்கள் வழங்கப்பெற்றன. கட்டிடத்தைத் திறந்தருளிய சென்னை மாநில முதலமைச்சரவர்களும், கட்டிடத்தைக் கட்டியுதவிய அ. கு. வேலனவர்களும் உரையாற்றினர்கள். அவ்வுரைகளையும் சங்க வாழ்த்துரைகளையும் இவ்விதழில் வெளியிட்டுள்ளோம்.

நலம்.

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

சென்னை திரு. A. K. வேலனவர்கள்

தம் தந்தையார் நினைவாக அமைத்துத் தந்துள்ள

அருணாசல நிலையம்

என்னும் பள்ளிக் கட்டிடத்தைத் திறந்தருளிய

சென்னை மாநில முதலமைச்சர்

திரு K. காமராசரவர்கட்குச்

சங்கத்தார் உளங்கூரன்பினுல் அளித்த

வாழ்த்துரை.

குறவஞ்சி

தென்குமரி வேங்கடம்ஆ யிடையில்அர சோங்கித்
திசைமுழுதும் இசைவளர்த்த செந்தமிழ்த்தாய் ஏங்கிப்
புன்மையுறுங் காற்கரந்தைச் சங்கமிகத் தாங்கிப்
புதுமைபெற நாளும்வளர்க் கின்றதறப் பாங்கில்

என்றுதெரிந் ததுவளர்க்க ஏற்றபொருள் கொண்டே
ஈத்துவக்கும் அன்பர்பல ஆயிரவர் உண்டே
நன்குபுரிந் திளையர்பயில் கூடமொன்று கண்டே
நாட்டியநம் 'வேலன்'அருந் தொண்டுபெருந் தொண்டே.

இங்கருணை சலநிலயம் திறக்கஅருள் கூர்ந்தே
எழுந்தருள்செய் காமராசர் வருகவலம் நேர்ந்தே
பொங்குதமிழ் முதலமைச்சர் வருகபுகழ் சேர்ந்தே
போற்றியுனை வாழ்த்துகிறோம் வாழ்கநலம் ஆர்ந்தே.

இந்தியத்தாய் அடிமைகெடத் தொண்டுசெய்த தாலே
எம்தமிழ வேள்உமாம கேசுரனார் போலே
வந்தனைசெய் தேத்துகிறோம் வாழ்கபுவி மேலே
வளமைசெறிந் துயருகநின் வலமிகுசெங் கோலே.

கும்மி

நாட்டின்வி டுதலைப் போருக்கு மார்தட்டி
நானென்று வந்துந லம்புரிந்தாய்—தமிழ்
நாட்டுத்த லைமையை ஏற்றுப்பெ ருந்தொண்டு
நானிலம் போற்றும்வ கைபுரிந்தாய்.

எஃகொடு மன்னும்இ னிமையும் கூட்டியெ
திர்ப்பவர்த் தேய்க்கும்வன் நெஞ்சுடையாய்—வலி
அஃகிநம் மக்கள்அ யர்வுறும் போதர
சாண்மையிற் கொண்டநல் லன்புடையாய்.

கற்றவர் கண்டும யங்கப்பல் லாயிரம்
காரியம் வீணுரை யாதுமின்றிப்—புரிந்
தற்றவர் கல்விய றிவொடு கைத்தொழில்
ஆக்கம்பெ றப்பணி செய்து நின்றாய்.

தன்னலம் இன்றியிந் நாட்டினுக் கேதன்னைத்
தந்தபெ ருந்தகை வாழியரோ—தமிழ்க்
கன்னியை ஆட்சியில் ஏற்றிமகிழ் காம
ராசரெ னும்வீர! வாழிய ரோ.

காவடிச்சிந்து

வேற்றவர் ஆட்சியை மாற்றிய போரினில்
வீரம்வி ளைத்தநல் லோய்—தமிழ்
ஆற்றலும் நேர்மையும் ஊற்றமும் தேர்ந்துநல்
லாட்சிபு ரியும்வல் லோய்.

எங்கள் தமிழ்ச் சங்கத் தொண்டினுக் காக்கமிங்
கேற்பன சூழுக வே—அகம்
பொங்கிநிறைந்துபு கழ்ந்தும கிழ்ந்துனைப்
போற்றுதும் வாழிய வே.

சந்தம்

வாழ்கபுகழ்க் காமராசர் வாழ்க வாழ்க வாழ்கவே!
வாழ்கதமிழ் அன்னை நாளும் வாழ்க வாழ்க வாழ்கவே!
வாழ்கதமிழ்ச் சங்கம்ஓங்கி வாழ்க வாழ்க வாழ்கவே!
வாழ்கதமிழ்த் தொண்டர்,அன்பர் வாழ்க வாழ்க வாழ்கவே!

கரந்தை, 20—3—57. } ச. சுயம்பிரகாசம், தலைவர்.

O3m21l, N25
59

சங்கத்தின் வரவேற்பிற்கு
மாநில முதலமைச்சர்

திரு. கே. காமராசர் பேருரை.

தலைவர் அவர்களே, பெரியோர்களே, தாய்மார்களே!

உங்களுடைய விழாவில் கலந்து கொண்டு, புதிய கட்டிடத்தைத் திறந்து வைப்பதற்கு நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகின்றேன். பல திறப்பு விழாக்களை நடத்தி இருக்கிறேன். நடத்திக்கொண்டே இருக்கிறேன். நான் மந்திரியாக இருக்கும் வரை நடந்துகொண்டே இருக்கும். அப்புறம் கூப்பிடுவார்களோ, மாட்டார்களோ எனக்குத் தெரியாது; அப்புறம் பார்த்துக்கொள்வோம். இங்கு திறந்து வைக்கும் விழாவிலே விசேஷம் என்னவென்றால், நன்றி மறவாமல் தான் பயின்ற பள்ளிக்கூடத்திற்கு, தன்னுடைய தந்தையின் பெயரால் கட்டிடம் கட்டிக் கொடுத்திருக்கிறாரே அதுதான். நன்றியை மறவாதிருக்க வேண்டும் என்ற உயரிய எண்ணத்தை வள்ளுவர் எடுத்துச் சொன்னார். உலகத்தில் உள்ள எல்லோரும் சொல்லுகிறார்கள். எண்ணிப் பார்த்தால் நன்றி மறவாமல் இருப்பவர்கள் எத்தனைபேர் இருப்பார்கள்? மிக அரிதாக இருக்கின்றார்கள். அப்படி அரிதாக இருப்பதினால் தான் உயர்வாகப் பேசுகிறோம். நன்றியை

மறவாமல் இருப்பது பெரிய காரியம்; சின்ன காரியம் அல்ல. அதனுல்தான், நன்றியை மறவாமல் யாராவது ஒருவர் செயல் செய்தால் அவரைப் போற்றிப் புகழ்கின்ருேம்.

நான் அவரைப் பார்த்ததேயில்லே. சென்னேயிலே எப்பொழுதோ ஒரு தடவை பார்த்தேன். இப்பொழுது இரண்டாவது தடவையாகப் பார்க்கிறேன். வேறு எங்கேயாகிலும் கூட்டத்திலே இருந்திருப்பாரோ என்னவோ, என் கண்களுக்குப் படவில்லே. ஒரு சமயம் அவர் கண் களுக்கு நான் பட்டாலும் பட்டிருக்கலாம். ஏன் என்ருல் மந்திரி வரும் போது அங்கே, இங்கே நின்று பார்த்துவிட்டுப் போய்விடுவார்கள். அதுபோல இருக்கலாம். இவரைப்பற்றி அதிகமாகவும் எனக்குத் தெரியாது. இவரது பெயரைப் பத்திரிக்கையில் பார்த்திருக்கிறேன். வேலன், கதை எழுதுவார், கதாசிரியர் என்று. இப்படி எங்கேயோ போகும் பொழுது இந்தத் தமிழ்ச் சங்கத்தைப்பற்றி விசாரித்தேன். அப்போது சொன்ஞர்கள் : “ இந்தச் சங்கத்திற்குக் கட்டிடம் கட்டு வதற்கு நன்கொடை வேலன் அவர்கள் கொடுத்திருக்கின்ருர்கள். அவர் எங்கள் ஊர்க்காரர், எங்கள் பள்ளிக்கூடத்தில் ஆசிரியராய் இருந் தவர், என்று. “ஓ! அப்படியா ” என்று அப்போதுதான் அவரைப் பற்றிய எண்ணம் என் மனதிலே ஏற்பட்டது. அவர் கதாசிரியராக இருந்து, சினிமாத் தொழிலிலே ஈடுபட்டு, சிறந்த வருவாய் உள்ளவ ராக இருந்து, நன்றி மறவாமல், தான் பயின்ற பள்ளிக்கூடத்திற்கு கட்டிடம் கட்டிக் கொடுத்தாரே; அது பெருமைக்குரியது. அதற்கு நான் வரவேண்டும் என்று கேட்டார்கள். நானும் ஒத்துக்கொண் டேன். ஆனுல் காலந்தான் இதுவரை வரவில்லே. எனக்கு எவ்வளவோ நாளாக வரவேண்டுமென்ற ஆசை. வேறு இடமாக இருந்திருந்தால் முடியாத போது சொல்லியிருப்பேன்—“ முடியாது, தொந்தரவு செய்யாதீர்கள் ” என்று. இதை அப்படி விட்டுவிட எனக்கு மனமில்லே. “ வேண்டாம், வரமுடியாது, நாளேத் தள்ளி வைத்து வேறு யாரையாவது கூப்பிட்டுத் திறப்பு விழாச் செய்யுங் கள் ” என்று சொல்லுவதற்கு எனக்கு மனமில்லாத காரணத்தால், அவர்களிடத்தில் திரும்பத் திரும்பச் சொன்னேன், நானே தான் வரவேண்டும் என்று. மற்ற ஊர்களில் நான் அப்படிக் கேட்டுக் கொள்வதில்லே. “ நீ ஒத்தி வைத்தால் வைத்துக்கொள்; என்ஞல் முடியாது ” என்று சொல்லிவிடுவேன். இந்த விஷயத்தில் நான் அப்படி நடக்கவில்லே. எனக்கே ஆசை, நானே தான் இங்கே வரவேண்டுமென்று.

முதலில் சம்பாதித்த பணம் என்றும் கேள்விப்பட்டேன். எல்லோரும் சம்பாதித்துச் சேர்த்த பிறகு செய்வார்கள்; வேறு வழியில்லே, சம்பாதித்து சேர்த்தாயிற்றே என்று; தண்ணீரை தேக்கி வைத்தாயிற்று, எங்கேயாவது உடைத்துவிட வேண்டும் அல்லவா? அதைப் போல செலவழிக்கிறவர்களும் உண்டு. இவர் அதைப்போலவும் செய்யவில்லே. ஏதோ ஒரு படத்திலே பணம் சம்பாதித்தார். முதல் கைங்கரியம் என்னவென்ருல் அவர் இதற்குக் கொடுத்தது தான். அப்படி என்ருல் அவர் உள்ளத்திலே இந்த

எண்ணம் எவ்வளவு நாளாக இருந்திருக்கும்? திடீரென்று ஏற்பட்டது என்று நினைக்கிறீர்களா? "நமது தமிழ்ச்சங்கம்; அது கூரையாக இருக்கிறது; இடமில்லை; அவத்தைப் படுகிறார்கள்; யாரும் உதவி செய்யவில்லையே, என்றைக்காவது ஒரு கட்டிடம் கட்ட வேண்டுமே என்ற எண்ணம் அவரது உள்ளத்திலே இருந்து கொண்டே இருந்திருக்கிறது. கிடைத்தவுடனே பணத்தைக் கொண்டு வந்து போட்டு விட்டார். அதனால்தான் திடீரென்று முதலில் வருவாய் வந்தவுடனே முதல் காரியமாகச் செய்து விட்டார். காரணம் அது தான். அப்படியில்லாவிட்டால் யாரும் முதலிலே சம்பாதித்தவுடனே போடமாட்டார்கள். ஏன் என்றால், குழந்தை குட்டிகளுக்கு வேண்டும்; வீடு, வாசல் வேண்டும்; சொந்தமாகக் காரியம் செய்ய வேண்டும் என்று தான் நினைப்பார்கள். தனக்குப் போகத்தான் தானதருமம் என்று சொல்லிவைத்திருக்கிறோமில்லையா! அதனால் அவரும் சொல்ல முடியுமில்லையா? ஆனால் அவர் அப்படியெல்லாம் செய்யவில்லை. பணம் வந்தவுடனேயே நல்ல காரியம் செய்திருக்கிறார். புகழ் என்பது அழியாத பொருளல்ல, பணம் எப்படி அழிந்துவிடுமோ, அதைப் போலவே புகழும் ஏற்பட்டு, ஏற்பட்டு மங்கும். நாம் புகழைப் பற்றிக் கவலைப்படக்கூடாது. அதைப்பற்றிக் கவலைப்பட்டுக்கொண்டே இருந்தால் மனம் அதிலேதான் ஓடும். நம்மைப் பற்றி நான்கு பேர் பேசுகிறார்களா, இல்லையா? இல்லாவிட்டால் அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். ஆனால் அதைச் செய்தவுடன் ஊரிலே பல பேர் கேலி செய்ய ஆரம்பித்து விடுவார்கள். மற்றவர்களைத் தனக்கு மாலை வாங்கிப் போடச் சொன்னவர்கள் இருந்ததாக கூடக் கேள்விப் பட்டிருக்கிறேன். வேலன் நல்ல புகழோடு பணத்தை சம்பாதித்தார்; நல்ல காரியத்துக்குக் கொடுத்தார்; பிச்சை போட்டால்கூடப் பாத்திரமறிந்து பிச்சை போட வேண்டும் என்று சொல்வார்கள். அதைப் போல எதற்குச் செய்ய வேண்டுமோ அதற்குச் செய்திருக்கிறார் வேலன்.

தலைவர் அவர்கள் சொன்னார்கள், இந்தக் கரந்தைத் தமிழ்ச் சங்கம் ஏற்பட்டு 50 ஆண்டுகளாகிறது; அதற்கு எத்தனையோ சிரமங்கள், கஷ்டங்கள் ஏற்பட்டன; ஓடிவிடலாமா என்று கூட நினைத்தார்கள். பிறகு தைரியம் வந்தது, நடத்தினார்கள். வாழ்க்கை இப்படித்தான் இருக்க முடியும். சிரமம் கண்டு ஓட நினைப்பது கோழைத்தனம். சிரமத்தைக் கண்டு ஓடக்கூடாது. சிரமம் இல்லாவிட்டால் ஓடிவிடலாம். மற்றவர்கள் பார்த்துக்கொள்வார்கள் என்று சிரமத்தை மற்றவர்கள் தலையில் போட்டுவிட்டு ஓடலாமா? கூடாது; அப்படிப்பட்ட மனப்பான்மை நமக்கு வரவே கூடாது. சிரமம் இல்லையென்றால் வாழ்வில் முன்னேற்றமே கிடையாது; ஏணியில் ஏறுவது போல் வாழ்க்கையில் திடீரென்று ஏறமுடியாது. அப்படி ஏறினால் கீழே தான் விழ வேண்டும். சிரமத்திலும் கஷ்டத்திலும், இந்தத் தமிழ்ச்சங்கத்தை 50 ஆண்டுகளாக நடத்திக் கொண்டு வந்த நிருவாகிகளுக்கு நன்றி செலுத்த வேண்டும். இதற்குப் பண

உதவி செய்த பலரைப் பாராட்டவேண்டும். வேலன் அவர்கள் இந்த கட்டிடத்தைக் கட்டிக் கொடுத்தார். இதைப் பார்த்து இன்னும் பலர் முன்னுக்கு வந்து, இந்தத் தமிழ்ச் சங்கம் நல்ல புகழோடும் மாண வர்களுக்குப் பயிற்சி அளிக்கக் கூடிய நிலைமை ஏற்பட வேண்டும், என்று ஆசைப்படுகிறேன்.

இங்கு ஒரு கல்லூரி இருப்பதாகவும் கேள்விப்பட்டேன். நான் இதற்குள் வந்ததே இல்லை. இது தான் முதல் தடவை. இதைப்போல் நல்ல காரியம் நடத்துவதற்குப் பெரியவர்கள், பணமுள்ளவர்கள் தாராளமாகப் பணவுதவி செய்தால்தான் நடக்கும். இந்த நாடு ஏழையான நாடு. கல்வியைப் பரப்புவதில் அரசாங்கமட்டுமே பொறுப்பேற்று நடத்திவிடமுடியாது. மத்தியான உணவுபற்றிச் சொன்னீர்கள். அதை அரசாங்கம் மட்டுமே நடத்தி விடமுடியாது. அரசாங்கம் கொடுக்கிற பணம் கொஞ்சம்தான். ஊரார் தான் கொடுக்கிறார்கள்; இப்போது இருக்கும் கஷ்டம் என்ன வென்றால், கிடைக்கும் பணத்தை வாங்கி, தானியத்தை வாங்கிச் சமைத்து, குழந்தைகளுக்குப் போடும் பொறுப்பேற்கத்தான் ஆட்கள் தேவை. பொறுப்பெடுக்க ஆள் இருந்தால் பணம் கொடுக்க ஆள் இருக்கிறது. கொடுக்க ஆள் இருந்தும், பொறுப்பெடுக்க ஆள் இல் லாமல் இருப்பது நியாயமா? பொறுப்பெடுக்க யோசனை செய்வது தவறு; பொதுக்காரியத்தில் ஈடுபட்டால் பலர் பலவிதமாகத்தான் பேசுவார்கள். நல்லதையோ, கெட்டதையோ சொல்லிக் கொண்டே இருப்பார்கள். இருந்தும் பொதுக்காரியங்கள் நடந்து கொண்டே தான் இருக்கின்றன. நம்முடைய நாட்டு மக்கள் நல்ல உள்ளம் படைத்தவர்கள். நம்முடைய தமிழ் நாட்டிற்குப் பெயரும் புகழும் வருவதற்குக் காரணம் என்னவென்று கேட்டால் மக்கள் தான். இப்போது தமிழ் நாட்டைப் பற்றிப் புகழ்கின்றார்கள். மற்ற நாட்டை விட இங்கே அரசாங்கம் நன்றாக நடைபெறுகிறது என்று. காரணம் என்ன? மந்திரிகளா? நிர்வாகத்தை நடத்துகிற உத்தியோகத்தர் களா? இல்லை. மக்கள் தான். அவ்வளவு பண்பாடு உள்ளவர்கள், எதை எப்போது செய்ய வேண்டும், செய்யக்கூடாது என்று சீர் தூக்கிப் பார்க்கும் திறன் படைத்தவர்கள் நம் தமிழ் நாட்டு மக்கள். அவ்வளவு சிறப்புள்ளவர்கள். அதனால்தான் தமிழ் நாட்டுக்கு அன்றும் பெருமை. இன்றும் பெருமை. அந்தச் சிறப்பு மாறாமல் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டியது நம் கடமை. நல்ல மனம் படைத்த கொடையாளிகள் முன் வந்து நல்ல காரியங்கள் செய்ய வேண்டும். வேலன் அவர்களும் ஏராளமாகச் சம்பாதிக்க வேண்டும். ஏராளமாகத் தருமம் செய்ய வேண்டும் என்பது என் ஆசை. அதற்கான மனம் அவரிடம் இருக்கிறது. அதைப்போலவே இது போன்ற காரியங்களை மற்றவர்களும் செய்ய முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்தக் கட்டிடத்தையும், வேலன் அவர்களின் தந்தையாரின் படத்தையும், வேலன் அவர் களின் படத்தையும், திறந்து வைக்கிறேன்.

கரந்தைத் தமிழ்ச் சங்கப் பள்ளிக் கட்டிடமாகிய

அருணாசல நிலையத்தை

20—3—59 இல் சென்னை மாநில முதலமைச்சர்

மாண்புமிக்க திருவாளர் கே. காமராசர்

அவர்கள் திறந்துவைத்தபோது

கட்டிடத்தைப் பெரும்பொருட் செலவில் அமைத்துதவிய

சென்னை அருணாசலப் படப்பிடிப்பு நிலைய உரிமையாளரும்,
அருணாசலம் திரைப்பட வெளியீட்டாளருமான

திருவாளர் அ. கு. வேலன் அவர்களுக்கு

க. த. ச. கல்வி நிலையங்களின் ஆசிரியர்கள் உளமுவந்துரைத்த

வாழ்த்தியலின்னுரை

1 தண்டமிழ் வளர்க்கும் தஞ்சைக் கரந்தையில் தகவாய்த் தோன்றி
மண்டிய புகழால் வாழும் மாண்பமை வேல! நல்ல
தொண்டினைத் தேர்ந்து செய்யும் தூய்மைசால் அன்ப! எம்பால்.
பண்டென நண்புமாருப் பண்ப! ஈங் கெழுக! வாழ்க!

2 அறிவுநல் லூக்கம் சான்ற அடக்கமும் அன்பும் சீர்த்த
நெறியுறு கடமைப் பண்பும் நேயமும் நிறைந்த செம்மால்!
முறையினற் றமிழ்த்தொண் டாற்றி முயன்றுயர்ந் தான்றோர் போற்றுந்
துறைகளுக் களித்து வாழும் தோன்றலே வருக! வாழி!

3 கண்ணொடு செவியும் காண்போர் கருத்தொடு நெஞ்சும் ஓகை
பண்ணுறு கலையைச் சங்கப் பைந்தமிழ்ப் புலவன் மிக்க
திண்ணிய நெறியாற் செய்து திகழ்தரு கின்றான் என்று
நண்ணுறு சொற்கள் கேட்டு நல்லுளம் பூத்தேம் வாழி!

4 திகழ்தமிழ் திரைப்ப டத்தின் திறன்மிகச் செழிக்க நல்ல
புகழ்வளர் படங்கள் நாடு பொலிவுற வெளியிட் டென்றும்
நிகழ்தரும் நிலைய மாக நினதரும் தந்தை பேரால்
முகிழ்தரச் செய்த நல்லோய் முயற்சிமேன் மேலும் வாழி!

5 அசைவிலா துழைத்திங் கோங்கும் அண்ணலே அ. கு. வேல!
திசையெலாம் தமிழின் மேன்மை திகழ்தரச் செயுங்க ரந்தை
மிசைவளர் தமிழ்ச்சங் கத்தார் விரும்பிநல் வாழ்த்துக் கூற
இசைமிகு தந்தை பேரால் எழுப்பினை நிலையம், வாழி!

6 வழங்கியும் வாழ வல்லார் வண்டமிழ்ப் புலவர் என்று
முழங்கிமுத் தமிழ்க்குந் தொண்டு முயன்றுநீ செய்து வாழும்
ஒழுங்குகண் டுவந்தேம் மேலும் உதவிநற் கலைகள் ஓங்க
வழங்கிநின் னுக்கம் பல்கி வளர்ந்துபல் லாண்டு வாழி!

7 திருவரு ணாச லப்பேர் திகழ்நிலை யந்தி றக்க
வருமுதல் அமைச்சர் வாழி! வளர்தமிழ்ச் சங்கம் வாழி!
பொருவரு வேலன் செல்வப் புகழ்மலிந் தூழி வாழி!
முருகொளிர் கலைகள் வாழி முத்தமிழ் வாழி வாழி!

சங்கத்தின் பாராட்டிற்கு

திரு. அ. கு. வேலன் அவர்களின்

நன்றியுரை.

தலைவர் அவர்களே! மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்களே! மற்றும் இங்கே நிறைந்துள்ள பெரியோர்களே! தாய்மார்களே! தோழர்களே!

உங்கள் அனைவருக்கும் என் வணக்கத்தினைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இங்கே எனக்குத் தந்திருக்கிற பெருமையினை, பாராட்டினை நினைக்கும்போது எனக்குப் பேசுவதற்கு வார்த்தைகள் வரத் தயங்குகின்றன. அதற்கு முதலில் உங்களிடத்தில் மன்னிப்பைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஒரு பழைய கதை உண்டு. கள்வன் ஒருவன் களவாடச் சென்ருனம். சென்ற இடத்தில் உறிக்கலயங்களைத் தேடிக்கொண்டு வருகின்ற பொழுது ஒரு கலயம் உருண்டு அவன் தலையிலே விழுந்து விட்டதாம். விழுந்த பொழுது அவன் உடல் முழுதும் திருநீறு விழுந்து விட்டது. கலயம் விழுந்த அரவம் கேட்டு வீட்டுக்காரர்கள் விழித்துக் கொண்டு வந்து பார்த்தார்கள். அவனைத் திருடன் என்று பிடித்து அடிக்காமல், பெரிய அடியார் என்று காலிலே விழுந்து வணங்கி மரியாதை செய்தார்களாம். சாதாரணமாகத் திருட வந்த இடத்தில் திருநீற்றுக்கு இவ்வளவு மரியாதை அளித்து நம்மைப் பெரியவராக, அடியாராக மதிக்கின்ருர்கள்; எப்பொழுதுமே அடியாராக இருந்து விட்டால் நாடெல்லாம் மதிக்கும், புகழும் என்று நினைத்து அன்று முதல் துறவியாஞனும். இப்படிக் கள்வன் துறவி யாஞன் என்று கதை சொல்லுவார்கள். இன்று நீங்கள் தந்திருக் கின்ற இந்தப் பெருமையினைப் பார்க்கும் பொழுது நிரந்தரமாக என்றென்றும் இது போல் பல நல்லறங்களைச் செய்ய என் மனம் விழைகிறது. அதற்கான ஊக்கத்தையும், உழைக்கும் வன்மையை யும், நல்ல மனத்தையும் நான் என்றென்றும் பெற்றிருக்க வேண்டும் என்று உங்களுடைய வாழ்த்தினை நான் விரும்புகின்றேன். அதனைக் கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

வணக்கம்!

க. த. ச. கல்வி நிலையங்களின்

ஆண்டு விழா நிகழ்ச்சிகள்.

கரந்தைப் புலவர் கல்லூரி :

இளங்கோவடிகள் தமிழ்க் கழக 21-ஆம் ஆண்டு விழா முத்தமிழ்க் காவலர், திரு. கி. ஆ. பெ. விசுவநாதமவர்கள் தலைமையில் (4—3—59) புதன்கிழமை மாலை நிகழ்ந்தது. அதுபோழ்து திரு. மு. க. தங்கவேலனார் எம். ஏ. 'தமிழ்க் கனல்' என்ற பொருள்பற்றி அரியதொரு விரிவுரை நிகழ்த்தினார். கல்லூரி விரிவுரையாளர் திரு. பாலசுந்தரனார் இயற்றிய 'ஆதிமந்தி' என்னும் கவிதை நாடகம் கல்லூரி மாணவர்களால் அடுத்த நாள் இரவு நடிக்கப் பெற்றது. நாடகத்திற்கு அரசர் சரபோசிக்கல்லூரிப் பேராசிரியர் திரு. இரா. சேஷாசலம் எம். ஏ, தலைமை தாங்கிச் சிறப்பித்தனர்.

உமாமகேசுவர உயர்நிலைப்பள்ளி :

மாணவர் இலக்கிய மன்ற 18ஆம் ஆண்டு விழா 6—3—59 புதன்கிழமை திரு. O. அமிர்தராசன் எம். ஏ., பி. எல்., (Judicial-Magistrate) அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. புட்பம் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திரு. கி. கோதண்டபாணி எம். ஏ. அவர்கள் 'இலக்கிய இன்பம்' என்ற பொருளில் அரியதொரு விரிவுரை ஆற்றினார்கள். மாணவியர்களால் கலை நிகழ்ச்சிகள் நிகழ்த்தப்பெற்றன. இரவு உயர்நிலைப்பள்ளி மாணவர்களால் பரிதிமாற் கலைஞர் இயற்றிய 'மான விசயம்' என்னும் நாடகம் நடிக்கப்பெற்றது.

O3/m21, N25
59

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

நாற்பத்தேழாம் ஆண்டு விழா.

(முற்றொடர்ச்சி)

தலைமையுரைக்குப்பின் மகாவித்துவான் மே. வீ. வேணு கோபாலப் பிள்ளையவர்கள் "மொழித்திறத்தின் முட்டறுத்தல்" என்ற தலைப்பின்கீழ் அரியதொரு விரிவான சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

இச் சொற்பொழிவின் சுருக்கம் பின்வருமாறு:—
தமிழவேள் தமக்குப் பல ஆண்டுகளாக நன்கு தெரிந்தவர்களென்றும், தம்மைப் பன்முறை பாராட்டியவர்களென்றும் சங்க வெள்ளி விழாவிற் பேச்சாளராகக் கலந்துகொண்டவர்களில் தாமும் ஒருவரென்றும் கரந்தைக் கவியரசர் வேங்கடாசலம் பிள்ளையவர்கள் தம்மிடம் பேரன்புகொண்டிருந்தனரென்றும் குறிப்பிட்டார்கள்.

புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாங் கிழமைதரும்.

என்ற குறட்பாவுக்கிணங்கக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தை நினைக்கும்போதெல்லாம் தமிழவேள் நினைவு எழுவதுண்டென்றுங் கூறினார்கள்.

தமிழ்மொழியறிவும் பயிற்சியும் வாழ்விற்குப் பெருந்துணை புரியாதென்று கருதுபவருண்டென்றும் ஆனால் தமிழால் வாழ்வாங்கு வாழலாமென்பதைத் தமது வாழ்விலேயே தாம் கண்டதாகவும் தமிழ்மொழிபோல் நல்லொழுக்கத்தையும் வாழ்க்கை நெறியையும் கற்பிக்கின்ற மொழி உலகில் வேறெங்குமில்லையென்பதாகவும் விளக்கமாக எடுத்துரைத்தார்கள். கல்வி மனிதனை உயர்த்தும்; பெருமதிப்பை அளிக்கும்.

இம்மை பயக்குமால் ஈயக்குறைவின்றால்
தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்
எம்மை யுலகத்தும் யாங்காணேம் கல்விபோல்
மம்மர் அறுக்கு மருந்து.

யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு.

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து.

இவைகளெல்லாம் தமிழ் மொழியில் எழுந்த அரிய பாக்களாகும். இவை தமிழிற்கே சிறப்பானவை.

எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு

என்ற குறளுக்கு உரை கூறி விளக்கவந்த பரிமேலழகர்

எழுத்தறியத் தீரும் இழிதகைமை தீர்ந்தான்
மொழித்திறத்தின் முட்டறுப்பான் ஆகும்—மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதனூல் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்

என்ற பொருள் செறிந்த பாட்டினை மேற்கோளாகக் காட்டியுள்ளார். எண், எழுத்து ஆகிய" இவ்விருதிறமும் அறமுதற் பொருள்களைக் காண்டற்குக் கருவியாகலின் 'கண்'ணெனப் பட்டன. "எழுத்தறிவித்தவன் இறைவன்" என்ற நிலை பழங் காலத்தில் நிலவிற்று. அக்காலத்தில் மாணுக்கர் ஆர்வத்தோடும் விருப்பத்தோடும் கல்வி பயின்றனர். அவ்வாறு கற்றவர்களை அத்தகைய பயிற்சி இன்றும் நன்னிலையில் வைத்திருக்கிறது.

முன்னோர் மொழிபொருளே யன்றி யவர்மொழியும்
பொன்னேபோற் போற்றுவ மென்பதற்கும்—முன்னோரின்
வேறுநூல் செய்துமெனு மேற்கோளி லென்பதற்கும்
கூறுபழஞ் சூத்திரத்தின் கோள்.

பழைய நூல்களினின்றும் மேற்கோள்காட்டி நிறுவுதல் தமிழ் மரபு. மொழிவளர்ச்சிக்கு இயற்கையுடன் செயற்கையும் இன்றியமையாததெனக்கருதி நம் முன்னோர் திட்பநுட்பஞ்செறியத் தமிழை வளர்த்து வந்தார்கள்.

சில்வகை யெழுத்திற் பல்வகைப் பொருளைச்
செவ்வனுடியிற் செறித்தினிது விளக்கித்
திட்பநுட்பஞ் சிறந்தன சூத்திரம்.

இயற்கையாகத்தோன்றி இயங்கும் மொழிக்குச் சிலவிதிகளை அரணாக அமைத்தார்கள். இதுவே இலக்கணமாக மொழியைக் காத்துவருகிறது.

மண்ணிடைச்சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணிடைப் படக்கிடந்ததா எண்ணவும் படுமோ.

என்று தமிழைப்போற்றுகிறுர் ஒருபுலவர்.

மொழிவளர்ச்சி நாட்டின் அரசியலைப்பொறுத்தது. ஆங்கிலேயர் ஆட்சியில் ஆங்கிலமொழிக்கு மதிப்புத்தந்து நம்மொழியை நாமே இகழ்ந்தோம். இதுவே நாம் தாழ்ந்து நமக்கு அடிமை

மனப்பான்மை கூடாதுபோனதற்குக் காரணம். நம்மொழியிற் காணும் பண்டைச் செல்வங்களை நாம் போற்றவேண்டும் தூய தமிழிற் பேசவும் எழுதவும் பழகவேண்டும். இடையூறுகளைப் பொருட்படுத்தலாகாது.

கான முயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது.

என்ற குறள் நமக்கு ஊக்கமூட்டுவதாகும்.

ஆண்டுவிழாவின் இரண்டாம்நாள் ஞாயிற்றுக்கிழமை (8—3—59) நிகழ்ச்சிகள் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் திரு. T. V. சதாசிவப் பண்டாரத்தாரவர்களின் சொற்பொழிவுடன் தொடங்கிற்று.

இதன் பின்னர், மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகரவர்கள் "மூவர் மொழிந்த அகத்துறைப்பாடல்கள்" என்ற தலைப்பில் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரையர், திருநாவலூரர் ஆகியோரின் அகத்துறை தழுவிய பாடல்கள் சிலவற்றை விளக்கினார்கள். இம்மூவரில் திருநாவுக்கரையர் ஓரிளம்பெண்ணின் தாய் கூறுவதுபோலக் கூறிய பாடலைக் குறிப்பிட்டு விளக்கினார்கள்

"முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள் தன்னாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே"

"கவி" என்பது தனித்தமிழ்ச்சொல் என்று "கவிதல்" என்பதற்குக் "கொத்துதல்" என்பது பொருள்; சொல்லை நிலைக்களமாகக்கொண்டு பொருளைக்கவிந்து நிற்பது கவி என்றும் இதற்கு மேற்கோளாக "நாவிற் புனைந்த நன்கவிதை மாறுமை மேவிப் பரந்து.........என்ற பரிபாடற் பகுதியைக் காட்டி — இவ்வடிகளில் அமைந்த 'கவிதை' என்ற சொல்லுக்குப் பரிமேலழகர் எழுதிய விளக்கத்தையும் சுட்டி விளக்கினார்கள்.

குரல் வினை.

சங்கீத வித்துவான், ப. சுந்தரேசன், குடந்தை.

நமது இசைத்தமிழில் பல்வேறு (செய்கைகள்) வினைகள் உண்டு. அவற்றுள் முதன்மையானது **குழற்கருவி வினைகள்.** அடுத்தது **யாழ்க்கருவி வினைகள்.** மூன்றாவது **குரல் வினைகள்** என்பதாம். இக் **குரல்வினைகள்** மக்கள் தனது குரல் (சாரீரம்) ஒன்றினால் மட்டும் வினை (பாடுதல்) செய்து தொழில் புரிவது எனப்படும். இவ்வினைகளிலும் பல்வேறு பிரிவுகள் உண்டு.

பாண் என்ற சொல், பாட்டு என்ற பொருளையே சிறப்புறத் தரும். அத்தொழிலைப் புரிபவர் பாணர் எனப் பண்டையகாலத்தில் வழங்கப்பெற்றனர். அப்பாணர்களுள்ளும் பெரும்பாணர்கள் எனவும் சிறுபாணர்கள் எனவும் இருவேறு பிரிவினர் இருந்தனராம். இவர்கள் தங்கள் தொழிலுக்கேற்றவகையில் பேரியாழ்க் கருவியையும், சீறியாழ்க்கருவியையும் வைத்திருந்தனர். பாடற்றொழிலையே தங்கள் குலத்தொழிலாகக் கொண்ட இம்மரபினர் யாவருக்கும் இசைத்தமிழே முதன்மையாகக் கொள்ளக் கிடந்தது. இசைத்தமிழினையொட்டிய இயற்றமிழும் நாடகத் தமிழும் இவர்களது தொழிலோடு ஒன்றிக்கிடந்தது எனலாம்.

தொழில்முறைகள் எதுவாயினும் அதனைத் தொழிற்படுத்தும் முறைகளை, **வினைபுரிதல்** அல்லது **வினைசெய்தல்** எனப்பட்டு அதனைத் தெளிவாக, அச்சொல்லோடு அம் விகுதி சேர்த்து **வினையம்** எனவும் கூறப்பட்டது. இம்முறையில் **குழல்வினை, யாழ் வினை, குரல்வினை** எனப்பட்டும், **குழல்வினையம், யாழ்வினையம், குரல் வினையம்** என வழங்கியிருத்தல் கூடும்.

இவ்வினைகள், குழலாசிரியர்களுக்கும் யாழாசிரியர்களுக்கும் அவரவர்கள் கைக்கொள்ளும் கருவிகளைப் பற்றியே நிகழ்வதாகும். ஆயினும், இசையாசிரியர்களுக்கோ (கண்டப்பாடல்) மிகமிக(ஒரே குரலில்) இன்றியமையாததாக இவ்வினைகள் உணரப்பட்டன. ஏனெனில் – கருவியாளர்கள் யாவரும், தனது கைவிரல்களால் குழற்கருவியில் துளைகளை அடைத்து விடுவதால் வினைகள் புரியக் கூடும். யாழ்க்கருவியில் விரல்களால் நரம்புகளைத் தெறிக்கும் முறைமையில் வினைகள் புரியக்கூடும். அத்தகைய எல்லா வினைகளும் ஒருவர் தனது ஒரே குரலினால் (கண்டத்தால்) காட்டுவது

என்பது மிகவும் இன்றியமையாததல்லவா? இதனை, மிகப்பழங் காலத் தமிழ்மக்கள் நன்கு நிரம்ப உணர்ந்திருந்தமையினாலேயே சிலப்பதிகாரத்தில், இசையாசிரியனமைதி பகரவந்த நம் இளங்கோ வடிகளும்,

"யாழுங் குழலுஞ் சீரு மிடறுந்
தாழ்குரற் றண்ணுமை யாடலொ டிவற்றின்
இசைந்த பாடல் இசையுடன் படுத்து
வரிக்கு மாடற்கு முரிப்பொரு ளியக்கித்
தேசிகத் திருவி னோசைகடைப் பிடித்து
தேசிகத் திருவி னோசை யெல்லா
மாசின் றுணர்ந்த வறிவின னாகிக்
கவியது குறிப்பு மாடற் றொகுதியும்
பகுதிப் பாடலுங் கொளுத்துங் காலை
வசையறு கேள்வி வகுத்தனன் விரிக்கும்
அசையா மரபின் இசையோன் ...."

எனத் தெளிவுபெறுமாறும் உய்த்துணருமாறும் மிக்க ஆழ்ந்த கருத்தோடு கூறிப்போந்தார்.

இப்பதினொரு அடிகளையும் உணர்ந்த அரும்பத உரைகாரர் கூறுவது,

"யாழ்ப்பாடலும் வங்கியப்பாடலும், இருவகைத் தாளக் கூறுபாடுகளும், மிடற்றுப்பாடலும், மந்தமாகிய சுரத்தினை யுடைய தண்ணுமையும், அகக்கூத்துப் புறக்கூத்தும் பதினோராட லென்னுங் கூத்துக்களும் வல்லனாய், இவற்றுடனே சேரச்செய்த உருக்களை இசைகொள்ளும்படியும், இரதம் பொருந்தும்படியும் புணர்க்கவும் வல்லனாய், இருவகைப்பட்ட பாடல்களுக்கும் இயக்கம் நான்கினையுமமைத்துத் தேசாந்தரங்களிற் பாடைகளையு மறிந்து, அந்தப் பாடைகள் இசைபூணும்படியையுமறிந்து இயற் புலவனினைவும், நாடகப் புலவன் ஈடும் வரவுகளும், இவற்றுக் கடைத்த பாடல்களும் தம்மிற் சந்திக்குமிடத்துக் குற்றந்தீர்ந்த நூல் வழக்காலே வகுக்கவும் விரிக்கவும் தொகுக்கவும் வல்லவனா யுள்ள இசைப்புலவன்........" என்பதாம். மேலும் இதனை, "இது பொழிப்புரை" எனவும் கூறிவிட்டார்.

இதே பொழிப்புரையை அடியார்க்குநல்லார் என்பார் அப்படியே எடுத்துக்கொண்டு கையாளுகின்றார். இவர் உரையைப் பதிப்பாசிரியர் பதிப்பிக்குங்காலத்து தொகுக்கவும் என்ற சொல் விடுபட்டுவிட்டது. சிலப்பதிகார முதற்பதிப்பில் அரும்பத வுரையில் தொகுக்கவும் என்ற சொல் இருப்பது மிகவும் சிறப் புடையதாகும். நிற்க, சிலப்பதிகாரம் ஆறும்பதிப்பில் அரும்பத உரையிலும், தொகுக்கவும் என்ற இச்சொல்லை விட்டுவிட்டனர் ஆக, தொகுக்கவும் என்ற முதற்பதிப்புச் சொல் மிகவும் இன்றி யமையாததாகும் என்பதனைமட்டும் இங்கே வற்புறுத்துகின்றேம்.

இவ்வாறு சில ஏடுகள் செல்லச்செல்ல சரீரவீணை என்ற சொல், அத்துணைப் பொருத்தமுடையதாகத் தோன்றாத காலத் தில், மெல்ல, னை என்ற இருசுழி னைகாரம் முச்சுழி ணை கார மாயிற்று. இப்பொழுது, சரீரவீணை என்ற அளவிற்கு, ஒரு உடம்பையே வீணையாகக் கொள்ளத்தக்க பொருளில் அமைந்து விட்டது. என்னே விந்தை! குரல்வினை என்ற சொற்களைத் தெளி வுறுத்தவேண்டி எளிய முறையில் அடியார்க்கு நல்லாரால் சாரீர வினை என்று கூறப்பட்ட பகுதி, சரீரவீணை என்ற மாறுபாடு கொண்டது. சில ஏடுகளில் மட்டுமே இம்மாறுபாடு இருந்து வந்ததால், (அல்லது ஒரு ஏட்டுப் பிரதியில் மட்டும் இவ்வாறு இருந்திருக்கக்கூடும்) பதிப்பித்த ஐயரவர்கள் இதனை விடாது "சரீரவீணை என்றும் பிரதிபேதமுண்டு" என உடுக்குறியிட்டு எடுத்துக்காட்டினார்கள். இவ்வாறு பிரதிபேதம் காட்டினமையி னாலே நாம் ஓர் ஒப்பற்ற உண்மையை நன்கு சிந்தித்து உணர முடிந்தது. இஃதிவ்வாறிருக்க, சிலப்பதிகார ஆறும்பதிப்பில், சாரீரவினை என்ற மூலத்தையே, சாரீரவீணையாகப் பதிப்பிக்கப் பட்டுள்ளது. இத்தகைய சிறுபகுதிகள் யாவும் நன்கு ஊன்றி உணரப்படாது வருவதும் நம் பண்டைய தமிழின்னீர்மை கெடுவதற்கு வழிகோலிவிடுவதாகின்றது.

ஆக குரல்வினை, படாதபாடுபட்டு ஓரளவு தனது பழமையை யும் திரிபையும் காட்டி ஓட்டிக்கொண்டிருப்பதனை நாமும் ஓரளவு உணர்வோமாக.

குரல்வினை யென்ற சாரீரவினை என்பது, மிகப்பழைய காலத் திலும் வாய்ப்பாட்டினையே குறித்ததாகும். வாய்ப்பாட்டுப்பகுதி

கள் பலவுண்டு. அவற்றைப் பொதுவாகக் கண்டப்பாடல் எனக் குறிப்பதும் பண்டைய வழக்கே. இவ்வழக்கு சிறப்பாக குரலி னால் (செய்யப்படும்) புரியப்படும் வினைவகையில் ஆளத்தி முறை யையே குறிக்கப்படுவதாயிற்று. (இதன் பகுதிகள் யாவும் நாம் எழுதும் "ஆளத்தி" எனும் கட்டுரையில் விரிவாகக் காணலாம்.)

நிற்க, இப்பகுதிகளில் வரும் சீரிய தமிழ்ச் சொல்லாம் மிடறும் என்ற இளங்கோவடிகளின் சொல்லிற்கு, வாய்ப்பாட்டு என்று இக்காலம் பொருள் கொள்ளக்கிடக்கின்றது. இவ்வாய்ப் பாட்டு வினையைத்தான் குரல்வினை எனக்கூறப்பட்டது.

இச்சொல்லிற்கு அரும்பதவுரைகாரர், "மிடறுமென்றது, மூலாதாரந்தொடங்கிய மூச்சைக் காலாற் கிளப்பிக் கருத்தா லியக்கி ஒன்றெனத் தாக்கி இரண்டெனப் பகுத்துப் பண்ணீர் மைகளைப் பிறப்பிக்கப்பட்ட பாடலியலுக்கு அமைந்த மிடற்றுப் பாடலுமென்றவாறு" என ஆழ்ந்ததொரு பொருளினை விளக்கித் தந்தருளினார்.

அடியார்க்கு நல்லாரோ, "மிடறுமென்பது, சாரீர வினையு மென்றவாறு" எனக் குறித்தார். சாரீரம் என்றால் குரல் என்பது இக்கால மக்களும் நன்கறிந்தேயுள்ளனர். குரல்வினை என்ற சொல்லின் பகுதியினை நன்கு சிந்தித்துணர்ந்த அடியார்க்கு நல்லார், ஏழிசைகளில் குரல் எனும் இசையொன்று உள்ளதையும் உளத்திற்கொண்டு, குரல்வினை எனக்கூறினால் அது குரல் என்ற இசைக்குரிய ஏதோ ஒரு வினையாகக் கருதிவிடாதிருக்கவேண்டி குரல் என்பதனை, இடத்திற்கேற்றவாறு சாரீரம் எனத்தெளிவு படுத்துவான்வேண்டி இவ்விடத்தில் குரல்வினை என்பதைச் சாரீர வினை எனக்கூறிவைத்தார்.

சாரீரவினை என்ற இச்சொல்லும் ஏடெழுதுவோரால், சா வன்னு ச னுவாகி, வி னு வீயன்னுவாகி, னையன்னு ணை யன்னுவாகி, நாளடைவில் சாரீரவினை, சரீரவீணை ஆயிற்று. அதாவது, சாரீரவினை என்ற சொற்களின் முதலெழுத்து சா என்ற நெடில், குறிலாக ச ஆனால் சரீரவினையாகும். பின் வி என்ற குறில் நெடிலாக வீ என மாறினால் சரீரவீணை ஆகும்.

இசையாசிரியனமைதி பற்றிய கருத்துக்கள் ஒவ்வொரு பகுதியாக "பொழிலில்" தனித்தனியே வரும்.

தமிழில் தாவரம்.

கு. சீநிவாசன், தாவர விரிவுரையாளர், அண்ணாமலைநகர்.

வேங்கை

பாட்டும் தொகையுமான தமிழிலக்கியத்தில் வேங்கை மரம் நூறிடங்களுக்கு மேலும் பயில்கின்றது. தாவரநூலில் வேங்கை டீரோகார்பஸ் மார்சூப்பியம் (Pterocarpus marsupium, Roxb) எனப்படும். பாப்பிலியோனேசீ (Papilionaceae) என்ற இதனுடைய தாவரக் குடும்பத்திலேயே மரங்கள் மிகக் குறைவு. கலியாண முருங்கை, புன்கு, புரசு, கருங்காலிமரம், வேங்கை முதலியனதான் மரங்களாக உள்ளவை. சிறு செடிகளும், புதர்களும் மிக்குடைய இத்தாவரக் குடும்பத்தில் ஞாழல், அகத்தி, அவுரி, துவரை, கொள், குன்றி முதலியன அடங்கும்.

வேங்கைமரம் சற்றேறக்குறைய ஆயிரத்து ஐந்நூறு அடி உயரத்திற்குமேல் நாலாயிரத்து ஐந்நூறு அடிக்குட்பட்ட மலைச் சரிவுகளில் நல்ல வெப்பமும், மிகுந்த மழையும் ஒருங்கமைந்த காடுகளில் ஐம்பது முதல் நூறடி உயரம் வரை நீண்டு செழித்து வளரும். இதன் அடிமரம் ஆறடிமுதல் எட்டடிவரை அகன்று பருத்து மிக்க வலியுடையதாயிருக்கும். இதனைக் கருங்கால் வேங்கை (நற்; 112, 168, 313; ஐங்குறு 219; அகம் 349, மதுரைக் 296) எனவும், பராரை வேங்கை (நற்.362) எனவும், நெடுந்தாள் வேங்கை(குறுந்.134) எனவும் கூறுப. டீரோகார்பஸ் (Pterocarpus) என்ற இவ்வினத்தில் (Genus) இருபது வகை மரங்கள் பல நாடுகளின் வெம்மை மிக்க காட்டகத்தே காணப்படுகின்றன. இந்திய நாட்டில் ஐந்து வகையின (Species) உள என்றும், தென்தமிழ் நாட்டில் டீரோகார்பஸ் சான்டலைனஸ் (Pterocarpus santalinus, Linn) டீரோகார்பஸ் மார்சூப்பியம் (Pterocarpus marsupium, Roxb) என்ற இருவகை மரங்கள் வளர்கின்றன எனவும், காம்பிள் (Gamble) ஹூக்கர் (Hooker) என்போர் குறிப்பிடுகின்றனர். இவற்றுள் P. மார்சூப்பியம் என்பதே வேங்கை எனப்படும். Indians Kins என்ற ஆங்கிலப்பெயர் பெற்ற வேங்கையின் வண்ணநொசி எண் (Chromosome number) $2 \times 22 \times 44$ என அட்சீசன் (Atchison) என்பார் அறுதியிட்டுள்ளார். இதனுடைய இலை ஐந்து முதல் ஏழு சிற்றிலைகளை (அலகு) உடையதாய் இருக்கும். P. சான்டலைனஸ் என்ற செஞ்சந்தன மரத்தின் இலையில் மூன்று முதல் ஐந்து வரை சிற்றிலைகள் காணப்படுதலின் வேங்கையை இதனின்றும் பிரித்தறிதல் எளிது. வேங்கையின் ஒவ்வொரு சிற்றிலையும் மூன்று முதல் ஐந்து அங்குலம் வரை நீண்ட முட்டைவடிவாயும், நன்று ஊடுருவிச் செல்லும் தடித்த இலை நரம்புகளை (Veins) உடையதாயும், தோல் போல் தடித்தும் இருக்கும். இலைநுனி ஒரோ வழி பிளவுபட்டு இருத்தலும் உண்டு.

பூத்துக்காய்க்கும் இயல்பினவாகிய இந்நாளைய தாவரங்களை ஆய்ந்து குடும்பங்களாகவும், இனங்களாகவும், வகைகளாகவும்

ஒழுங்குபடுத்திப் பயிலுதற்குச்செடி கொடியாகிய இயல்புகளும், இலையின் பல்வேறு பண்புகளும் வேண்டப்படுமாயினும், பூக்களும் பூவியல்புகளுமே பெரிதும் துணை செய்வன ஆகும். தமிழிலக்கியத்திலும் வேங்கைப்பூவின் இயல்புகளே பெரிதும் பயிலப்படுகின்றன. பொதுவாக வேங்கையிணர் கணுக்குருத்தாகவும் நுனிக் குருத்தாகவும் வளர்ந்து கொத்தாகப் பூக்கும். பூ மஞ்சள் நிறமானது, ஐந்து புறவிதழ்களும்(Sapals)கருமை கலந்த பழுப்பு நிறமுடையனவாகவும் ஐந்து அகவிதழ்களும் (Petals) புறவிதழ்களைக் காட்டிலும் இரு மடங்கு பெரியவையாகவும், பொன் மஞ்சள் நிறமுடையனவாகவும் இதழ்களில் விளிம்புகள் அமைந்தும் இப்பூ கண்கவர் வனப்புடையதாகவும் இருக்கும். இதனைத் தங்கால் பொற் கொல்லன் வெண்ணுகனுர்.

> கருங்கால் வேங்கை நாளுறு புதுப்பூப்
> பொன்செய் கம்மியன் கைவினைகடுப்பத்
> தகை வனப்புற்ற —நற் 313

என்று மிக நன் குரைப்பாராயினர்.

பாப்பிலியோனேசீ என்ற இக்குடும்பத்திற்கு அகவிதழ் அமைப்பில் ஒரு சிறப்புண்டு. பூவின் மேற்புறமிருக்கும் அகவிதழ் சற்றகன்று பெரியதாகவும், அடிப்புறத்துள்ள இரண்டு இதழ்கள் தோணிபோல வளைந்தும் இடைப்பட்ட இரு விதழ்கள் சிறுகிச் சிறகுபோலவும் அமைந்திருக்கும். இத்தன்மையான அமைப்பினுல் பூக்கள் சமச்சீர் (Symmetry) அற்று விளங்கும். வேங்கைப் பூவிலும் மேலிதழ்கள்சற்றுபெரியதாகவும், கீழிதழ்கள்சிறிதுநீண்டுகுவிந்தும், பக்கவிதழ்கள் அடியில் சிறுத்து நுனி அகன்றும் இருக்கும். பத்து கேசரங்களும் (Stamens) ஐந்தைந்தாக இரு கூருகி, தாதுப்பைகளை (Anthers) த்தாங்கி நிற்கும். தாது (Polleu) பொன்பொடியென்ன ஒளிரும். முசலி (Oveary) ஓரறையுடையது (Mono Carpellary). ஒன்று முதல் ஒன்றரை அங்குலமுள்ள வட்டமாயும், தட்டையாயும் உள்ள இதன் காயினில் பெரிதும் ஒரே விதை முற்றி இருக்கும்.

வேங்கை பூப்பதும், பூத்தமலர் உதிர்தலும் சற்றேக்குறைய ஒருவாரத்தில் நிகழ்ந்து விடும். ஆதலின் பூக்கத் தொடங்குங்கால் பெரும்பாலான அரும்புகள் ஒருங்கே மலர்தல் உண்டு. இவ்வியல் பினை நுனித்தறிந்த தமிழ்ச்சான்ருேர், "அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை" (நற் 112; குறுந் 26; புறம் 202) என அடுத்தடுத்து கூறுதல் மகிழ்தற்குரிய செய்தி ஆகும். நல்ல மஞ்சள் நிறமுள்ள வேங்கைப் பூவைப் பொன் வண்ணத்திற்கு உவமித்த பல பாக்கள் உள.

> "பொன்னென
> வேங்கை தாய ஓங்குமலை அடுக்கத்துப்"— நற். 28
> "பொன்னிணர் வேங்கைப் பூஞ்சினைச் செலீஇயர்"—
> நற் 151

"பெருவரை வேங்கைப் பொன்மருள் நறுவீ"—ஐங் 217

"பொன்மருள் நறுவீ கல்மிசைத் தாஅம்"— நற். 257

"கருங்கால் வேங்கை மலரின் நாளும்
பொன்னெண வீசு மந்து"— புறம் 137.

பூங்கண் வேங்கைப் பொன்னிணர் மிலைந்து—அகம். 182

அழகும் நறுமணமுமுள்ள வேங்கைப் பூவைப் பெரிதும் மகளிர் சூடிக்கொள்ளுதல் வழக்கம். இதன் பூக்கொய்தற்கு அவர் தம் ஆயத்துடன் சென்று புலிபுலி என்று பூசல் செய்வர். வேங்கை என்ற சொல் புலி எனவும் பொருள்படும். மலர்ந்த வேங்கைமரம் புலியை ஒத்திருக்கும் இதனை நோக்கிப் போலும் வேங்கைப் பூவினையே புலி என்பதுமுண்டு. "வேங்கையும் புலி யீன்றன" என்ற நற்றிணை (389) அடிக்கு, "வேங்கைமரங்களும் புலிபோன்ற புள்ளிகளையுடைய மலரரும்பி மலர்ந்தன" என உரைகூறுவர். அன்றியும்

"புலிப்பொறிவேங்கைப் பொன்னிணர் கொய்து ஐங் 396

"அரும்பற மலர்ந்த கருங்கால்வேங்கை
மாத்தகட்டு ஒள்வீ தாய துறுகல்
இரும்புலி வரிப்புறங் கடுக்கும்"- புறம் 202

"வேங்கைதாய தேம்பாய் தோற்றம்
புலி செத்து வெரீஇய புகர்முகவேழம்" அகம் 12

"உறுபுலி உருவேய்ப்பப் பூத்த வேங்கையை"— கலி 38

"புலிஉரி வரிஅதள் கடுப்பக் கலிசிறந்து
நாட்பூ வேங்கை நாள்மலர் உதிர"— அகம் 205

"கல்அயற் கலித்த கருங்கால் வேங்கை
அலங்கலந் தொடலை யன்ன குருளை"— நற்—383

"கருங்கால் வேங்கை வீயுகு துறுகல்
இரும்புலிக் குருளையிற் றோன்றும்" குறு. 47

என் வருவனவற்றுள் வேங்கை புலியை ஒத்திருக்குமென்பதறியலாம். ஆகவே வேங்கைமலர் கொய்யச் செல்லுநர் புலிபுலியென ஆர்வாரித்தலை.

"மன்ற வேங்கை மலர்பதம் நோக்கி
ஏருதிட்ட ஏமப் பூசல் குறு. 24

"ஒலிசினை வேங்கை கொய்குவம் சென்றுழி
புலிபுலியென்னும் பூசல் தோன்ற" அகம் 48

கிளர்ந்த வேங்கைச் சேண்நெடும் பொங்கர்ப்
பொன் நேர் புதுமலர் வேண்டிய குறுமகள்
இன்னா இசைய பூசல் பயிற்றலின்"— அகம் 52

"கருங்கால் வேங்கை இருஞ்சினைப் பொங்கர்
நறும்பூக் கொய்யும் பூசல்" மதுரை-296

"தலைநாள் பூத்த பொன்னிணர் வேங்கை
மலைமார் இடூஉம் ஏமப் பூசல்" மலைபடு-205

எனவரும் அடிகளிற் காணலாம். ஏமப் பூசல் என்ற சொற்றொடருக்கு நச்சினார்க்கினியர், "முதல் நாளிலே பூத்த பொன் போலும் கொத்தினையுடைய வேங்கைப் பூவைச் சூடுதற்கு மகளிர் புலிபுலி என்று கூப்பிடும் ஏமத்தையுடைய ஆரவாரமும்" என்றும், "வேங்கை வளைந்து பூவைக் கொடுத்தலின் அச்சந் தீர்த்த பூசலென்றார்" என்றும் உரை கூறுவாராயினர். ஆதலின் பூத்த வேங்கைச்சினை தாழ்ந்து கொடுத்தற் பொருட்டு மகளிர் புலிபுலி என்று ஆரவாரிப்பர். தமிழிலுள்ள இக்கருத்திற்குத் தாவரநூலாதாரமுண்டா என்பது ஆய்தற்குரியது. வேங்கைச்சினை பல்கோடி உயிரணுக்களால் ஆயது. ஒவ்வொரு உயிரணுவிலும் உயிர்த்தாது (Protoplasm) என்ற உயிர்ப் பொருள் இருக்கின்றது. புலிபுலி என்னும் பூசலாகிய ஒலியால் இத்தாதுப் பொருளில் சில மாற்றங்கள் நிகழக்கூடும் எனவும் சங்கத் தமிழ்ப்புலவர் எதையுந் திரித்துரைக்கமாட்டார் ஆதலின் இதில் ஏதேனும் உண்மை இருக்கக்கூடும் எனவும் சில ஆண்டுகட்கு முன் தாவர ஆராய்ச்சி மன்றத்தில் விளக்கியபொழுது ஒலியலைகள் (Sound Waves) உயிரணுக்களி (Cells) லுள்ள உயிர்த்தாதுவை (Protoplasm) உறுத்தும் போலும்; அதனால் உயிர்த்தாது உந்தப்பெற்று தம்மியல் மாறித் தண்டு வளைதலும், வளர்ச்சி பெருகுதலும் கூடும் என்ற கருத்து மேம்பட இத்துறையில் பலப்பல ஆராய்ச்சிகள் நிகழலாயின.

இனி, புலிபுலி என்ற பூசல் கேட்ட தலைவன் ஆயத்தொடு நின்ற தலைவியைக் காணுதற்கும், களிவேட்டற்கும் (அகம் 48) முடிந்தவாறு போல இப்பூசல் கேட்ட ஊர் மக்கள் (அகம் 52) ஆகொள் வயப்புலி வந்ததென்று சீறி எழுதற்கும் காரணமாயிற்று. அன்றியும், சுரும்பினம் வேங்கை மலர்ந்ததாக எண்ணிப் புலியைச் சூழ்தலும் (கலி. 46) புலியென்றெண்ணிய யானை வேங்கை மரத்தைத் தாக்குதலும் (கலி 4956) கலித்தொகை காட்டும் காட்சிகளாகும்.

வேங்கைமரத்தில் மயில் வீற்றிருத்தலை அதில் பூக் கொய்யும் மகளிர்க்கு உவமித்த பாக்களும் உள்ளன.

"அரும்பற மலர்ந்த கருங்கால்வேங்கை
மேக்கெழு பெருஞ்சினை இருந்த தோகை
பூக்கொய் மகளிரிற் றோன்று நாடன்"— குறுந். 26

எரிமருள் வேங்கை இருந்த தோகை
இழையணி மடந்தையின் தோன்று நாட" அகம் 294

"விரிந்த வேங்கைப் பெருஞ் சினைத் தோகை
பூக்கொய் மகளிரின் தோன்றுநாட"— அகம் 297

மேலும், யானைப் போரிற் சாய்ந்த வேங்கைமரத்தில் மகளிர் பூக்கொய்தலை ஓர் அழகிய குறுந்தொகை (208) கூறுகின்றது.

ஒன்றே னல்லேன் ஒன்றுவென் குன்றத்துப்
பொருகளிறு மிதித்த நெரிதாள் வேங்கை
குறவர் மகளிர் கூந்தற் பெய்ம்மார்
நின்று கொய மலரு நாடனொடு
ஒன்றேன் தோழி ஒன்ற னானே.

இச் செய்யுட்கு இளம் பூரணம் (தொல் பொருள்—34) கூறியுள்ள அழகிய இறைச்சிப் பொருளும், பேராசிரியர் கூறிய (தொல். உவம. 25, 26) உரையும், நச்சினார்க்கினியர் (தொல். அகத். 47) உரைத்த உள்ளுறைப்பொருளும் படித்து அறிந்து சுவைத்து மகிழ்தற் குரியன.

ஒரு சில புலவர்கள் வேங்கைப்பூவை நெருப்புத்துண்டிற்கு உவமித்தனர்,

"எரிமருள் வேங்கைக் கடவுள் காக்கும்"— நற் 216
"எரிமருள் வேங்கை இருந்த தோகை"— ஐங் 294
"எருவை நந்தோடு எரிஇணர் வேங்கை"— பரி. 19
"திருந்தரை நிவந்த கருங்கால் வேங்கை
எரிமருள் கவளம் மாந்தி"— அகம். 349

எனவரும் தொடர்களைக் காண்க. இவற்றிற்கெல்லாம் மேலாக, பூத்த வேங்கையில் பூ உதிர்தலை.

கொல்லன், எரிபொன் பிதிரின் சிறுபல தாஅய்
வேங்கை வீயுகும் ஓங்குமலைக் காட்சி"— நற். 13
"நல்லிணர் வேங்கை நறுவீ கொல்லன்
குருகுஊது மிதி உலைப் பிதிர்வின் பொங்கி
சிறுபல் மின்மினி போலப் பலவுடன்
மணிநிற இரும்புதல் தாவும் நாட— அகம் 202

என்பர். கொல்லன் இரும்பைப் பழுக்கக் காய்ச்சித் தனது உலைக் களத்தில் அடிக்கிறான். இரும்புத்துகள் ஒளிர்ந்து சிதறிப் பறந்து விழுகின்றன. இவ்விரும்புப் பிதிர்விற்கு உதிரும் வேங்கைமலர் உவமிக்கப் படுகின்ற இம் மலைக்காட்சி மிக நன்றாக அமைந்துள்ளது. வண்ணவுவமமும் தொழிலுவமும் ஒருங்கமைந்த இச் செய்யுளி ரண்டும் நெஞ்சையள்ளும் பான்மைய.

பதிற்றுப்பத்தில் பாக்களின் தலைப்பு ஒரு சிலபூக்களைக் கொண்ட தாகவும் அமைந்துள்ளது. ஆம்பல், குவளை, காஞ்சி, வேங்கை முதலியன அப்பாக்களில் பயிலப்படுகின்றன. நாற்பத்தொன்பதாம் பாடல் சுடர்வீ வேங்கை எனப்படும்.

"வரை சேர்பு எழுந்த சுடர்வீ வேங்கைப்
பூவுடைப் பெருஞ்சினை வாங்கிப் பிளந்து"
காந்தளைக் காட்டிலும் வேங்கைப்பூவில் பரி 49.

இருபது மகரந்தப் பைகள் (Anthers) இருத்தலின் தாது (Pollen) மிகுதியாக விளையும். இப்பூந்தாது பொன்னிறமாக இருக்கும். இதனை வண்டினம் உண்டு மகிழும். வண்டு வாய்திறப்ப வேங்கைமலர் தலுமுண்டு. மலர்ந்த வேங்கை மரத்தில் மயில் வந்தமர்ந்து அதன் மேல் பூந்தாது பொழிந்தது. இச் செயல் தோகை அழகுக்கு அழகு செய்வதாய் அமைந்தது. அன்றியும் பூசிய சந்தனச் சாந்தின் ஈரம் புலரவேண்டி, வேங்கைப் பூவின் தாதினை மகளிர் அப்புதலும் உண்டு. (திருமு. 32-36)

நன்பொன் அன்ன நறுந்தாது உதிர— அகம் 378

பொன்மருள் நறுந்தாது ஊதுந் தும்பி— அகம் 388

சுரும்புண விரிந்த கருங்கால் வேங்கை— நற் 178

வேங்கை தந்த வெற்பணி நல்நாள்
பொன்னின் அன்னபூஞ்சினை தழீஇ
கமழ்தாது ஆடிய கவின்பெறு தோகை— நற். 596

என்பனவற்றல் அறியலாம்.

வேங்கைமரத்தைப் பற்றிய வேறு சில உண்மைகளும் உள்ளன. பண்டைக் காலத்திற்போல வேங்கை தென்னிந்தியாவில் மிகுதியாக இப்பொழுது வளர்வதில்லை. தமிழ்நாட்டின் தனிச்சிறப்புடையதாக வளர்ந்த இம்மரம் இற்றைநாளில் அருகி வருகின்றது. இதன் அடிமரம் நல்ல உறுதியுள்ளது. இழைத்துத் தேய்த்தால் நல்ல பளபளப்பும் சற்று செந்நிறமுள்ள இயற்கையழகும் பெற்றுத் திகழுமாதலின் கதவுப் பலகைக்குப் பயனுகின்றது. மைசூர் நாட்டில் புகைவண்டித் தொடர்க்கு அடியில் இது இடப்பட்டுச் சோதனை செய்ததில் இம்மரம் பல்லாண்டுகள்வரை கெடாமலும், சிதலால் அழிக்கப்படாமலும் இருந்தது என்றெல்லாங் கூறுவர். காம்பிள் (Gamble) தேக்கு, மூங்கில், செஞ்சந்தனம் முதலிய மரங்களுடன் வேங்கை வளரும். காடுகளில் இவை தீப்பற்றிக்கொள்ளுமாயின் வேங்கை மட்டும், மற்றவை போல முற்றிலும் எரிந்தொழிவதில்லை. இவ்வுண்மையைக் கோயம்புத்தூர் வடக்கேயுள்ள காடுகளில் தாம் நேரில் கண்டதாக லஷிங்டன் (Lushington) என்பார் கூறுகின்றனர். அன்றி ராட்ஜர் (Rodger) என்பவர் வேங்கை மரத்தைப் பற்றி விரிவாக ஒரு ஆராய்ச்சிக் கட்டுரை எழுதியுள்ளார். (Note on Bijasal or Vengai-Forest Bulletin No. 17-1913) இந்தியாவின் பல் வேறு பகுதிகளில் இது பயிரிடப்படுகின்றதெனினும் இது சிறப்பாகத் தென்னுட்டு மரமெனவும்; இதனை எங்ஙனமெல்லாம் பயன்படுத்தலாமெனவும்; இதனுள் டானின் (Tannin) என்ற தோல் பதனிடு சாயப் பொருள் எந்த அளவிற்கு உள்ளதெனவும் அதனைப் பிரித்தெடுத்துப் பயன்படுத்துவது எவ்வாறெனவும், மரத்தின் வன்மையைப் பல முகங்களால் நன்காராய்ந்தும், நன்கு கண்காணிக்கப்பெறின் வேங்கையின் அடிமரம் பதினுரடிச் சுற்றளவு வரையில் பெருகுமெனவும் கூறுவர்.

முத்தொள்ளாயிரம்.

திரு, அடிகளாசிரியர், புலவர் கல்லூரி, கரந்தை.

முத்தொள்ளாயிரம் ஓர் இனிய தமிழிலக்கியமாகும். இதனைப் பற்றிய பொதுவான செய்திகளை முதலிற் கூறுகின்றேன்.

இது அரைகுறையாகக் கிடைத்த நூல்களுள் ஒன்று. புறத்திரட்டு என்னும் தொகை நூலிலிருந்து நூற்றென்பது செய்யுட்களும் தொல்காப்பிய உரை முதலானவற்றிலிருந்து இருபத்திரண்டு செய்யுட்களும் ஆகிய இவைகளே இப்பொழுது கிடைத்திருக்கின்றன. இந்நூலை இயற்றிய ஆசிரியர் பெயர் தெரியவில்லை. சிலர் நக்கீரதேவநாயனார் என்பவர் இயற்றியதாகக் கூறுவர். அதற்குத் தக்க சான்றில்லை. முத்தொள்ளாயிரத்தைப் பாடிய புலவர் தமிழ்நாட்டு முடிமன்னராகிய மூவேந்தரையும் இதனுள் வைத்துப் பாடி மகிழ்கின்றார். இந்நூல் வெண்பாவால் பாடப்பட்டுள்ளது.

மூவேந்தருள் ஒவ்வொருவரைக் குறித்தும் தொளாயிரம் பாட்டுப் பாடப்பட்டதால் மூன்று தொளாயிரம் முத்தொளாயிரமாயிற்று என்பர் ஒரு சாரார். மற்றொருசாரார் மூன்று அரசரைப்பற்றிய தொளாயிரம் பாட்டு என்னும் காரணத்தால் முத்தொள்ளாயிரம் என்று பெயரமைந்தது, "வச்சத் தொள்ளாயிரம் அரும்பைத் தொள்ளாயிரம், என்னும் நூல்கள் போல," என்பார். எது உண்மையாகும் என்பது நூல் முற்றிலும் கிடைத்தபொழுதே துணியப்படும். தொல்காப்பிய உரையாசிரியராகிய பேராசிரியர் என்பார் விருந்து என்னும் புதுமை இலக்கியத்திற்கு மேற்கோளாக இந்நூலை எடுத்துக் காட்டியுள்ளார். இலக்கணவிளக்கப் பாட்டியலார் எண்ணளவால் பாடப்படும் நூலுக்கு இதனை எடுத்துக் காட்டாக அமைத்துள்ளார்.

செவ்வூர்ச் சிற்றம்பலக் கவிராயரவர்கள் வீட்டிலிருந்து கிடைத்த பாட்டொன்று முத்தொள்ளாயிரத்தைக் கடைச் சங்க நூலாகக் கூறுகின்றது. ஆனால் ஆராய்ச்சி அறிஞர் அது அவ்வளவு காலப்பழமையைப் பெற்றிருக்கமுடியாது என்று கருதுகின்றனர்.

முத்தொள்ளாயிரத்துள் சோழர் தலைநகராக உறையூரும் காவிரிப்பூம்பட்டினமும் குறிக்கப்பட்டிருப்பதால் சோழமன்னர்க்குத் தஞ்சை, கங்கைகொண்டபுரம் என்னும் நகரங்கள் தலைநகராவதற்கு முன் அதாவது கி-பி ஒன்பதாம் நூற்றுண்டுக்குமுன் இது இயற்றப்பட்டிருக்கலாம் என்று கருதுகின்றனர்.

முத்தொள்ளாயிரம் எழுதப்பட்ட காலத்தில் தமிழ்நாட்டு மூன்று மன்னரும் பிறர் எவர்க்கும் அடிமைப்படாமல் தம் நாட்டைத் தாமே ஆண்டுவந்தனர் என்பதும் அவர்களுள்

1—12—58 இல் இக்கட்டுரை திருச்சிராப்பள்ளி வானொலி நிலையத்தில் பேசப்பட்டது. அந்நிலயத்தாரின் ஒப்பம் பெற்று வெளியிடப்பட்டது. கோடிட்டவை காலங்கருதி நிலயத்தில் பேசப்படவில்லை.

சோழ வேந்தன் மட்டும் வடதிசை நோக்கிச் சென்று காஞ்சீபுரம், உச்சயினி, கருநட தேசம் ஆகிய இவற்றை வென்றதன்றிக் கடல் கடந்து போய் ஈழநாட்டையும் வென்றனன் என்பதும் அறியப்படுகின்றன.

இனி இந்நூலுள் அமைந்துள்ள சுவையான பாடல்களைப் பார்ப்போம். தேனெழுகும் தென்றமிழ் நாட்டை ஆண்ட பாண்டியன் மிகவும் வலிமை வாய்ந்த மன்னனாகும். அவன் தன் கையிலுள்ள கூர் வேலைத் தன்னைப் போன்ற பெரிய அரசர் மேல் விடுவானேயொழிய ஏனையர் மேல் விடமாட்டான். அப்படி விடுவதும் அவ்வரசரின் இடைக்கும் கீழான உறுப்புக்களில் விடாமல் அம்மன்னரின் நெஞ்சிலே பாயும்படி விடுவானாம். இவ்வாறு அவன் வேல் விடும் செய்தியைப் புலவர் கற்பனை நயம் தோன்றக் கூறியுள்ளார். "உலகத்திலுள்ள செம்பொன்னெல்லாம் பாண்டிய மன்னன் நாட்டிலே வந்து குவிகின்றன; எங்கும் உள்ள முத்தமிழ் நூல்களெல்லாம் அவன் பதியாகிய மதுரையிலே வந்து குவிகின்றன; வெவ்வேறு கடல்களிலே உள்ள சங்கும் முத்தும் அவனுடைய கடல் நீரிலே வந்து குவிகின்றன; ஏனைய நாட்டிலுள்ள யானைகளெல்லாம் இவன் மலைச்சாரலில் வந்து குவிகின்றன; ஆனால் இம்மன்னன் கூர்வேல் மட்டும் வேற்று நாட்டிலுள்ள வேந்தரின் மார்பிலே சென்று படுகின்றன" என்று கூறுகின்றார்.

"பார்படுப செம்பொன் பதிபடுப முத்தமிழ் நூல்
நீர்படுப வெண்சங்கும் நித்திலமும்—சாரல்
மலைபடுப யானை வயமாறன் கூர்வேல்
தலைபடுப தார்வேந்தர் மார்பு"

என்பது அக்கருத்தமைந்த செய்யுளாகும்.

பாண்டியனது வேல் பகை மன்னரின் மார்பினையே குறித்துப் பாய்வதால் "இடிக்கு அஞ்சிப் பாம்பு விடரில் ஒளிந்துகொண்டிருப்பதைப் போல" அம் மன்னரெல்லாம் பாண்டியனுக்கு அஞ்சிப் பாதுகாவலான இடத்தில் பதுங்கிக்கொண்டிருக்கின்றனர். அவர் அங்கே உறங்கும்பொழுதெல்லாம் பாண்டியனது வேல் தங்கள் மார்பிலே பாய்வது போலக் கனக் கண்டு, அலறி எழுந்து, வருந்தி, அந்தோ! பாண்டியனைப் பகைத்துக் கொண்ட பண்பினால் அல்லவா இவ்வாறு பதுங்கிக்கிடந்து வருந்துகின்றோம்! அச்சமில்லாமல் வெளியே வந்து உலவும் காலம் நமக்குக் கிடைக்குமோ! என்று வருந்தி இருந்தனராம். இந்நிகழ்ச்சியைப் புலவர்,

"அருமணி ஐந்தலை ஆடரவம் வானத் (து)
உருமேற்றை அஞ்சி ஒளிக்கும்—செருமிகுதோள்
செங்கண்மா மாறன் சினவேல் கனவுமே
அங்கண்மா ஞாலத் தரசு"

என்று கூறியுள்ளார்.

இவ்வாறு பகை மன்னரெல்லாம் துன்புற்றிருக்கும் பொழுது, பாண்டியனின் பிறந்த நாள் விழா வருகின்றது. இதற்கு வெள்ளணி விழா என்று பெயர். இவ் விழா நாளில் அரசன் பகைவருடன் போர்செய்தல், அவர்களைச் சிறையிலடைத்தல் அல்லது கொல்லுதல் முதலான தீய செயல்களைச் சிறிதும் செய்யமாட்டான். அதற்கு மாருக எல்லா உயிர்களிடமும் அன்பு பூண்டு நாட்டிற்கு நன்மை பயக்கும் செயல்கள் பலவற்றை அன்று செய்வான்.

பாண்டியனின் வெள்ளணி விழா வந்ததை அறிந்த சிலர்! பகைமன்னரிடஞ் சென்று சொல்லுகின்றனர்: "பகை மன்னர்களே, இன்று பாண்டியன் பிறந்த உத்திராட நாள் விழா கொண்டாடப் படுகிறது; இன்று அம்மன்னன் போரே செய்யமாட்டான்; நீங்கள் அவனுக்கு அஞ்சிப் பதுங்கிக் கிடக்கவேண்டாம்; கோட்டைக் கதவுகள் எல்லாவற்றையும் நன்கு திறந்து கொண்டு அச்சமில்லாமல் வெளியே வந்து உலாவுங்கள்; உங்கள் படைகளாகிய யானை, தேர், குதிரை முதலானவற்றைப் போருக்கு எந்தப்பொழுதிலும் புறப்படும் படியாக ஆயத்தம் பண்ணியிருப்பதை விடச்செய்யுங்கள்" என்று சொன்ஞராம். இந்நிகழ்ச்சியைப் புலவர்,

"கண்ணார் கதவம் திறமின் களிறொடுதேர்
பண்ணார் நடைப்புரவி பண்விடுமின்—நண்ணாதீர்!
தேர்வேந்தன் தென்னன் திருவுத்தி ராடநாள்
போர்வேந்தன் பூச லிலன்,,

என்று பாடியுள்ளார்.

இளமை முதுமை என்னும் இரண்டில் இளமை உலகம் அடங்காத ஆர்வம் படைத்தது; துடுக்கான மொழிகளைப் பேசி மிடுக்கான நடைநடந்து துள்ளித்திரியும் இயல்பு வாய்ந்தது; ஊரிலும் நாட்டிலும் நடக்கும் ஒவ்வொன்றையும் பார்த்து மகிழவேண்டும் என்ற அடங்காத எழுச்சியை யுடையது; இவற்றிற்கு மாருய் ஒவ்வொன்றிலும் அடக்கமாயிருக்கவேண்டும் என்பதையே விரும்பும் அனுபவம் வாய்ந்தது முதுமை உலகம்.

எழுச்சியோடு நடக்கும் இளைஞரைப் பார்த்து "அங்கே போகாதே, அதைப் பார்க்காதே, அதைச் செய்யாதே" என்று அடிக்கடி எச்சரித்துத் தடுத்துக்கொண்டிருப்பர் அவ்விளைஞர் வீட்டிலுள்ள முதியோர்; அதைக் கேட்டவுடன் இளைஞருள்ளம் மிகவும் வருந்தும்; அதனல் சில குடும்பங்களில் கலகம் நிகழ்வதும் உண்டு; சில இளைஞர் தம் பெற்றேருக்கே புத்தி புகட்டுவர்; இவ்வாறு நிகழும் உலக நிகழ்ச்சியைப் புலவர் முத்தொள்ளாயிரப் பாட்டொன்றில் கூறுகிருர்.

பாண்டிய மன்னன் கண்டோர் காதலிக்கும் பேரழகு படைத்தவன்; அவன் மதுரைத் தெருவிலே ஒரு நாள் உலா வருகின்ருன்; அப்பொழுது ஒரு வீட்டிலே உள்ள தாயொருத்தித் தன் மகளை நோக்கி " நீ வீதிக்கும் போகக்கூடாது; வேந்தனை விழியாலும்

பார்க்கக்கூடாது" என்று கடும் உத்திரவு போட்டாள்; மன்னன் பேரழகு படைத்தவனென்று மகள் முன்னரே கேள்விப்பட்டிருந்தாள்; அரண்மனைக்குப் போய் அரசனுடைய அழகைப் பார்க்க முடியாவிட்டாலும் அவன் வீதியில் வரும்பொழுதாவது பார்த்துவிட வேண்டும் என்பது மகளின் வெகு நாளைய எண்ணம்; இந்த நிலையில் தாய் உத்திரவு மகளுக்கு மிகவும் ஏமாற்றத்தையும், வருத்தத்தையும் அளித்தது; அதனால், சோகமே உருவாய் வீட்டுள் ஓர் மூலையில் உட்கார்ந்திருந்தாள்! அப்பொழுது அவளுடைய தோழி அங்கே வந்தாள்; அவளைப்பார்த்துக் கூறுகின்றாள்; "தோழி! நம் தாய் ஒரு காலத்தில் நம்மைப் போல இளையவளாயிருந்து பின்னர் தானே முதுமை அடைந்தாள்! அவள் இளையவளாயிருந்த பொழுது உலக நிகழ்ச்சி ஒன்றையும் உணர்ந்து கொள்ள விரும்பாமல் மூலையிலேயே முடங்கிக் கிடந்திருப்பாளா? இளைய உள்ளம் எப்படி இருக்கும் என்பது இளமையை அனுபவித்த அவளுக்குத் தெரியாதா? மண்ணுலகத்தை யெல்லாம் கொண்ட மன்னன் பாண்டியன் உலாவந்தால் கண்கொண்டு பார்க்காதே என்கின்றாளே தாய்!,, என்று கூறி வருந்தினளாம்! இந்நிகழ்ச்சியைப் புலவர்

"வளையவாய் நீண்டதோள் வாட்கண்ணாய்! அன்னை
இளையளாய் மூத்திலள் கொல்லோ?—தளையவிழ்தார்
மண்கொண்ட தானை மறங்கனல்வேல் மாறனைக்
கண்கொண்டு பார்க்கலென் பாள்."

என்று கூறியுள்ளார்.

இளையர் முதியோரைக் குறை கூறுவது போல, "நான் எவ்வளவோ சொன்னேன்; இளமை மயக்கத்தினாலே என் சொல்லை ஏற்றுக்கொள்ளாமல் தம் மனம் போல நடந்து இப்பொழுது இப்படித் துன்பமடைகின்றனரே" என்று முதியோரும் இளையோரைக் குறைகூறுவதுண்டு. அந்நிகழ்ச்சியைச் சோழன்மேல் வைத்துப் புலவர் அழகுபடக் கூறியுள்ளார். மன்மதனைக்காட்டிலும் அழகிலே சோழ மன்னன் சிறந்தவன். அவன் ஓர் நாள் தன் தலைநகராகிய உறையூர்த் தெருவிலே உலா வந்தான். அதை உணர்ந்த தாயொருத்தி தன்னுடைய பெண்களைப் பார்த்து "சோழன் உலா வருகின்றான். நீங்களெல்லாம் சென்று அவனைப் பார்க்காதீர்கள்" என்று கூறினாள். தாய் கூறிய சொல்லைப் பிள்ளைகள் மதிக்கவில்லை. சோழன் உலாவருதலைச் சென்று பார்த்தனர். அப் பெண்களுடைய பார்வைக்கு எடுத்த எடுப்பில் அம்மன்னன் அணிந்திருந்த மாலையும் அம்மாலையுடன் கூடிய தோள்களுமே புலப்பட்டன. அத் தோளழகு இப் பெண்களின் கண்களை வேறு உறுப்பிற்குச் செல்லவொட்டாதபடி தடுத்து விட்டது. அதனால் சோழ மன்னனுடைய மாலையையும் தோள்களையும் பெற வேண்டுமென்ற ஆசை அப்பெண்களுக்கு உண்டாகி விட்டது. ஆனால், இவர்கள் விரும்பிய வண்ணம் சோழ மன்னனுடைய மாலையும் தோளும் எளிதில் கிடைப்பதாயில்லை. பாவம்! காதல் நோய் கரைகடைந்து

வளர்ந்து வருத்துவதாயிற்று. அதனால் ஊணும், உறக்கமும் இல்லாமல் வருந்தினார்கள். உடம்பிலுள்ள அழகெல்லாம் கெட்டன. உடம்பிலே பசலை ஊரத் தொடங்கிற்று. இவற்றையெல்லாம் உணர்ந்த தாய் சொல்லுகின்றாள், "சோழன் உலா வந்தால் பார்க்க வேண்டாமென்று நான் தான் அன்றே சொன்னேனே! காய்ந்த விறகின்மேல் நெருப்பை வைத்தால் அது நன்றாகப் பற்றி எழும்; தண்ணீரின் மேல் நெருப்பை வைத்து மூட்டினால் அது பற்றவா போகிறது? அதைப் போலக் கிழவியின் சொல் குமரிகளின் காதில் ஏறவா போகிறது? என்று குறை கூறினாளாம் இந்நிகழ்ச்சியைப் புலவர்,

"அலங்குதார்ச் செம்பியன் ஆடெழிற்றோள் நோக்கி
விலங்கியான் வேண்டா வெனினும்—நலந்தொலைந்து
பீர்மேல் கொளலுற்ற பேதையர்க்கு என்வாய்ச்சொல்
நீர்மேல் எழுந்த நெருப்பு"

என்று பாடியுள்ளார்.

இனிச்சேரனைப்பற்றிய சில நிகழ்ச்சிகளைப் பார்ப்போம்.

சேர்நாடு நல்ல நீர்வளம் நிறைந்த நாடாகும். அங்கே வயல்களில் காலை நேரத்தில் சென்று பார்த்தால் செக்கச் செவேர் என்று ஆம்பல் மலர்கள் மிகுதியாகப் பூத்துக்கிடக்கும். மலையாள மொழியில் தண்ணீரை 'வெள்ளம்' என்று கூறுவர். வயல்களில் உள்ள வெள்ளத்தின் மேல் செவ்வாம்பல்கள் மிகுதியாகப் பூத்திருக்கும் காட்சி வெள்ளம் தீப்பற்றி எரிவதைப் போல விளங்குகிறது. வயல் நிலத்தில் வாழும் பறவைகளெல்லாம் அக்காட்சியைப் பார்த்து வெள்ளம் தீப்பற்றிக்கொண்டு வேகின்றதென்றே கருதிவிட்டன; அதனால், தம் குஞ்சுகள் தப்பித் தவறி அந்நெருப்பில் பறந்து சென்று விழுந்து விடுமோ என்று அஞ்சித் தம் இரண்டு பக்கத்துச் சிறகுகளிலும் அவற்றை அடக்கிக்கொண்டு கத்துகின்றன என்று புலவர் சேர நாட்டைச் சிறப்பிக்கின்றனர். இப்படிச் சிறப்பித்தலில் புலவர்க்கு ஒரு உட்கருத்து உண்டு. அது என்ன என்றால் "வெள்ளம் தீப்பற்றிக் கொண்டது என்று பறவைகள் செய்யும் ஆரவாரத்தைத் தவிர்த்துச், சில கொடியோர் வீடுகளில் தீ வைத்துவிட, அதைக்கண்டு அஞ்சி மக்கள் எழுப்பும் ஆர்வாரமே சேரநாட்டில் இல்லாத வண்ணம் சேர் அரசன் தன் வேலினாலே தீயவரைத் தண்டித்துத் தன் நாட்டை நன்கு காப்பாற்றுகின்றான்" என்பதே அக்கருத்தாகும்.

"அள்ளற் பழனத்து அரக்காம்பல் வாய்அவிழ
வெள்ளம்தீப் பட்டது என்வெரீஇப்—புள்ளினந்தம்
கைச்சிறகால் பார்ப்பொடுக்கும் கவ்வை உடைத்தரோ
நச்சிலைவேல் கோக்கோதை நாடு"

என்பது அச்செய்யுள்.

அக்காலத்து அரசரிற் பலர் தம் குடிகளுக்குக் குறை ஏற்படாதவாறு நன்குணர்ந்து அரசு செலுத்திவந்தனர். அம் மன்னர் மாறுவேடம் பூண்டு நாட்டிலும் நகரத்திலும் திரிந்து குடிமக்களுக்கு என்ன குறை உள்ளது என்று தெரிந்து கொண்டு அக்குறையை நிறைவேற்றிக் கொடுப்பர். இத்தகைய அரசருள் மிகச் சிறந்தவன் சேரமான் மாக்கடுங்கோ என்பவன். அத்தகைய சேரமன்னனை ஒரு பெண் கண்டு காதலித்தாள். தன் காதலைத் தான் கூறுமலேயே சேரன் அறிந்து நிறைவேற்றுவான் என்று அவள் பல நாள் காத்திருந்தாள். காத்திருந்தும் என்? சேரன் அவள் காதலை அறிந்து நிறைவேற்றுவதாகத் தெரியவில்லை. ஒரு நாள் தானும் தன் தோழியும் தனித்திருந்து என்ன செய்வதென்று எண்ணினர். அப்பொழுது தோழி "நம் குறையை நம் அரசனுக்கு நாமே கூறிக்கொள்வது நன்று" என்று சொன்னாள். இதைக் கேட்ட அப்பெண் "அந்தோ! நம் உயிர் போனாலும் போகட்டும், நம் குறையை நாமே சென்று கூறுதல் கூடாது" என்றாள். இதனைக் கேட்ட தோழி சொல்லுகின்றாள் "பிறர் குறையை அவர் சொல்லுவதற்கு முன்பே அறிந்து தீர்ப்பதில் நம் அரசன் வல்லவனாகும். அப்பேர்ப்பட்டவனுக்குக்கூட சில சமயத்தில் நம் குறையை நாமே சொல்ல வேண்டித்தான் உள்ளது. அவன்மேற் குறையொன்றுமில்லை. அவனுக்கு எத்தனையோ காரியங்களிருக்கும். நம் குறையை நாமே எடுத்துச் சொன்னால்தானே அவனுக்குத் தெரியும். அழுத பிள்ளை தானே பால் குடிக்கும்! இது தானே உலகத்தியல்பு" என்று கூறுகின்றாள். இந்நிகழ்ச்சியைப் புலவர்,

" மல்லனீர் வையகத்து மாக்கடுங்கோக் காயினும்
சொல்லவே வேண்டும் நமகுறை—நல்ல
திலகம் கிடந்த திருநுதலாய் அஃதால்
உலகங் கிடந்த இயல்பு "

என்று கூறியுள்ளார்.

இவ்வாறு சிறந்த கருத்துக்களைக் கொண்டது முத்தொள்ளாயிரம். தமிழிலக்கியச் சுவையைக் காண விரும்பும் அறிஞரெல்லாம் இதனைப் படித்து மகிழ வேண்டுகின்றேன்.

தமிழ் வாழ்க!

தமிழ்ப் பொழில்

துணர் ௩௪

விளம்பி

1958—59

கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

தொண்டு தமிழ் முன்னேற்றம்

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

பொழிற்றொண்டர் :

ச. சுயம்பிரகாசம், B. A., B. L.,

உள்ளுறை.

விளம்பி 1958—59	துணர் ௩௪.	மலர் ௧-௧௨ பக்கம்

1. பேராசிரியர் பெ. சுந்தரம் பிள்ளை. 1
2. அந்தாதி இலக்கியம்
   திரு. அடிகளாசிரியர் 13,63-67
3. தூங்கானை மாடம்
   திரு. வை. சதாசிவ பண்டாரத்தார் அண்ணாமலைநகர் 17
4. தொல்—சொல், சேனாவரையர் உரை விளக்கம்
   பண்டித, சித. நாராயணசாமி. 21, 59, 91,148, 179, 209, 229, 277, 305, 343
5. போரும் அமைதியும்
   சாமி. சிதம்பரனார். 25, 55
6. கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் முதல் இராசேந்திர சோழனின் செப்பேடுகள் 30
7. நாவலர், ந. மு. வேங்கடசாமி நாட்டார் பேரவை 14-ஆம் ஆண்டுவிழா 32
8. வண்மையும், வாழ்த்தும் 33
9. மருதந்துறை என்பதன் மரூஉ மதுரை
   Prof. அ. கிருட்டினமூர்த்தி M. A., B. L., 34
10. தஞ்சை இராசராசேச்சுரக் கல்வெட்டு வரலாறு
    வித்துவான், வை. சுந்தரேச வாண்டையார். 42 139
11. வேந்தனா? வேய்ந்தவனா?
    வித்துவான் ஆதி. முருகவேள். 49
12. அற்ப உவமையில் அரியபொருள்
    வித்துவான், முத்து. கண்ணப்பன் B. A. M. L. C. 65, 137, 274
13. முதற் கோப்பெருஞ்சோழனைப்பற்றிய சில கல்வெட்டுப் பாடல்கள்
    S. திருஞானசம்பந்தன் M. A. 69
14. இசைத் தமிழ்ப்பண்கள் விளக்கம்
    சங்கீதம் ப. சுந்தரேசன் 71, 173, 202, 238, 270
15. வருணன் வணக்கம்
    மயிலை சீனிவேங்கடசாமி 77

16. மக்கள் வாழ்வும் இலக்கியமும்
திரு. சாமி. சிதம்பரனர் 82
17. கால்டுவெலும் அவர் வாழ்ந்த காலமும்
திரு. நீ. கந்தசாமி பிள்ளை 97
18. தமிழர் கண்ட கடவுள்
திரு. சாமி. சிதம்பரனார். 129 a
19. இலங்கைத் தீவில் வருணன் வணக்கம்
மயிலை, சீனி வேங்கடசாமி 142
20. தமிழ் முகம்
திரு. ஞா. தேவநேயன், M. A., 155
21. தஞ்சைப் பெரியகோயில் கல்வெட்டாராய்ச்சி
திரு. S. திருஞானசம்பந்தன் M. A. 161. 213, 243, 266.
22. முன்னோர் கடவுள் வழிபாடு
திரு. சாமி. சிதம்பரனர் 166
23. மதிப்புரைகள் 171, 248, 310
24. குறுந்தொகையிற் பாலை பாடிய பெருங்கடுங்கோ (திறனய்வு)
திரு. சாமி. செல்வவிநாயகன் 185
25. திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் 60-ஆம் ஆண்டு விழா 189, 228
26. இரவுக்காலம்
திரு. அடிகளாசிரியர் 190
27. வாழ்வும், வழிபாடும்
திரு. சாமி. சிதம்பரனர் 193
28. பண்டைத் தமிழர் சமயம்
திரு. சாமி. சிதம்பரனர் 217
29. கையறு நிலை 236
30. இயற்கைக் காட்சி
பண்டித. வித்துவான் சங்குப்புலவர் 246, 308
31. அறிஞர், சர். சகதீச சந்திர போசு
சி. இராமலிங்கம் M. A., அண்ணமலைநகர் 249
32. பழந்தமிழர் உணவு வகை
திரு. சாமி. சிதம்பரனர் 253
33. அறிஞர் ஆராய்க
திரு. அடிகளாசிரியர் 262

34. வஞ்சிக்காண்டம்
திரு. மது. ச. விமலானந்தம், எம். ஏ. 281
35. சாதியும் தமிழரும்
திரு. சாமி. சிதம்பரனுர் 296
36. சமணரும், சிற்றண்ணல்வாயில் குடைதளியும்
திரு, சி. கோவிந்தராசன் 297
37. போற்றுதும்—தமிழன்பன் 309
38. தமிழில் தாவரம் குறிஞ்சி. 313
" " காந்தள் 347
திரு. கு. சீனிவாசன், M. SC.,
39. கரந்தைத் தமிழ்ச்சங்க நிகழ்ச்சிகள் 317
40. இருபெரும் புலவர்கள்
T. V. சதாசிவ பண்டாரத்தார் 318
41. தமிழகப் புலவர் குழு
வித்துவான். ந. இராமநாதன் 322
42. தேனவரை நாயனுர் சாசனம்
மயிலே. திரு. சீனி. வேங்கடசாமி 325
43. வரலாறு கொண்ட நாகத்தீ(வு)
வித்துவான். சி. கோவிந்தராசன் 328
44. பழந்தமிழர் நம்பிக்கைகள்
திரு. சாமி. சிதம்பரனுர் 333
45. தமிழரசி தாலாட்டு
வித்துவான்-சொ. சிங்காரவேலனுர் 342
46. கரந்தைத் தமிழ்ச் சங்கம் 47-ஆம் ஆண்டு விழா 345
47. அடஞ்சியூர் கல்வெட்டும் சிற்பமும்
வித்துவான் திரு. சி. கோவிந்தராசன் 353
48. ஓருலகில் தமிழன்
வித்துவான், திரு. வி. சச்சிதானந்தம் 356
49. உடம்படுமெய்
வித்துவான் திரு. F. X. C. நடராசா. 363
50. அன்பர் எனப்படுவர் யார்
திரு. சு. குமாரசாமி 368
51. சங்க 47-ஆம் ஆண்டு விழாத் தலைவர் வரவேற்பு
வாழ்த்துரை 374